வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.06.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 203 | பக்கங்கள் : 16

## இந்தியாவில் பாபர் மசூதிக்கு நடந்தது தையிட்டியில் விகாரைக்கும் நடக்கும்!

### மைத்திரியிடம் எச்சரித்த சிவசேனை அமைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 30

இந்தியாவில் பாபர் மசூதிக்கு நடந்தது தையிட்டி விகாரைக்கும் நடக்கும் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சுதந்திர

15

## சம்பளத்தை அதிகரிக்க பட்ஜெட்டில் எதிர்பார்ப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 30

வரவு - செலவு திட்டத்தில் அரச பணியாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் சம் பள அதிகரிப்பை மேற்கொள்ள ஜனாதிபதியும் எதிர்பார்த்துள்ளார். இதன்படி, இந்த வருடத்துக்கான இறுதி காலாண்டு வரவு - செலவு திட்ட சமர்ப்பிக்கப்படும்போது சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

15 இலட்சம் அரச பணியாளர்களின் சம் பளத்தை அதிகரிக்க அரசாங்கம் கடுமையான நிலைப்பாடுகளையும் எடுக்கவேண்டியுள்ளது - என்றும் கூறினார். (ஐ)



## முன்னாள் எம். பி. விஜயகலா புத்தளம் விபத்தில் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகனம் மரத்துடன் மோதியதில் அவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

புத்தளத்தில் பயணித்துக் கொண்டிருந்த

15

# சிறுவர் மீதான வன்முறை யாழ்ப்பாணத்தில் உச்சம்

## 9 பொலிஸ் பிரிவுகளில் மாத்திரம் 5 மாதங்களில் 53 முறைப்பாடுகள்

- என். குகராஜ் -

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் சிறுவர்மீதான வன்முறை சம்பவங்கள் உச்சளவில் அதிகரித்துள்ளன. இந்த ஆண்டில் மே மாதம் வரையான - 5 மாதங்களில் மட்டும் 9 பொலிஸ் பிரிவுகளில் 53 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது கடந்த ஆண்டில் பதிவான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையிலும் விட அதிகமாகும்.

15

## கல்லுண்டாய்வெளி விபத்தில் இளைஞர்கள் இருவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன் 30

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் - அராலி வீதியில் கல்லுண்டாய்வெளி சந்தியில் நேற்று மதியம் ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், வட்டுக்கோட்டையை சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது 29), வட்டுக்கோட்டை சங்கரத்தையை சேர்ந்த மகேஸ்வரன் மதுரன் (வயது 37) ஆகியோரே உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அராலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி

15

## 10,355 ஊழியர்களுக்கு நிரந்தர பணி நியமனம்!

### உள்ளூராட்சி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் 10 ஆயிரத்து 355 ஊழியர்களின் பணியை நிரந்தரமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர அறிவித்துள்ளார்.

இந்த ஊழியர்களில் தற்காலிக ஒப்பந்த காரர்கள், மாற்றுத் திறனாளிகளும் அடங்குவர். இவர்களை நிரந்தரமாக்குவதற்கு ஜனாதிபதி மற்றும்

15

## புத்தூர் வன்முறை: 25 பெண்களுமாக 31 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 30

புத்தூரில் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 25 பெண்கள் உட்பட 31 பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும், இந்தச் சம்பவத்துடன்

15

## மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வந்தார்!

### பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இதன்போது அவர் டான் தொலைக்காட்சி பணிமனைக்கு வருகை தந்தார்.

டான் தொலைக்காட்சி பணிமனைக்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதிக்கு டான் தொலைக்காட்சியின் முதன்மை இயக்குநர் அதிகாரி இ. செல்வசந்திரன், டான் செய்திகள் ஆசிரியர்

15

## அஸ்வெசும திட்டத்தில் எவரையும் கைவிடாதீர்

### ஜனாதிபதி ரணில் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 30

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை எவருக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் தகுதியானவர்கள் எவரையும் கைவிடாத வகையிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். அரசாங்கத்தின் நியதிகளுக்கமைய செயல்படுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

15

## எதிர்க்கட்சிகள் மக்களை பகடைக்காயாக்கக்கூடாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு விடயத்தில் எதிர்க்கட்சிகள் எம்முடன் கைகோர்க்க வேண்டும். அல்லது தங்களின் பாதையில் செல்ல வேண்டும். அதைவிடுத்து மக்களை பகடைக்காய்கள் ஆக்கக்கூடாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்றைய தினம் சந்திப்பு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துரைக்கை யிலேயே

15

ஈழநாடு



# யாழ்ப்பாணத்தின் குடாக் கடல் சேற்றுக்கடலாக மாறும் அபாயம்!

## சமூக செயல்பாட்டாளர் செல்வின் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாண குடாக்கடல் பாரம்பரிய கடற்றொழிலில் இருந்து விலகி அட்டை பண்ணை தொழில் விஸ்தரிக்கப்படுவதால் இன்னும் பத்து வருடங்களில் குடாக் கடல் சேற்றுக்கடலாக மாறுவதை யாரும் தடுக்க முடியாது என்று சமூக செயல்பாட்டாளர் எஸ். செல்வின் தெரிவித்தார்.

உலக வங்கியால் வெளியிடப்பட்ட கடல் அட்டை பண்ணை தொடர்பில் கடற்றொழில் சங்கங்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆழம் குறைந்த கடற்கரைகளில் எவ்வித பரந்துபட்ட ஆய்வுகளும் திட்டமிடல்களும் இன்றி கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடலட்டை பண்ணைகளால் கடல்வாழ் உணவு சங்கிலியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிர் பல்வகைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

வடக்கு மக்கள் மட்டுமின்றி இலங்கையில் வாழும் மக்கள் கடல் அட்டையை உணவு தேவைக்காக பயன்படுத்தாத நிலையில் டொலரைப் பெறப் போகிறோம் எனக்கூறி வெளிநாடுகளுக்கு எமது பாரம்பரிய கடல் வளத்தை விற்க முடியாது. அதுமட்டுமல்லாது கடல் மேலாண்மைக்காக கட்டமைக்கப்பட்ட கடற்கரையோர மீனவ மக்களின் வாழ்க்கை முறையை அட்டைப் பண்ணை என்ற பெயரில் பல் தேசிய நிறுவனங்களை வளர்ப்பதற்காக எமது மக்களையோ கடல் வளத்தையோ அழிக்க முடியாது.

எமக்கு பொருத்தமற்ற கடல் அட்டைப் பண்ணைக்கான அட்டைக் குஞ்சுகளை யாரோ ஒரு வெளிநாடு சக்தியின் வழங்கிவரும் நிலையில் அறுவடை செய்யும் போது விலையையும் அவர்களை நிர்ணயம் செய்கிறார்கள். சில வேளை குஞ்சுகளை வழங்கியவர்கள் அறுவடை காலத்தில் அதனை ஏற்றுமதி செய்யா விட்டால் பாதிக்கப்படுவது எமது மீனவர்கள்.

40 நாள் கோழி குஞ்சை வளர்த்து முட்டை பெறமுடியாத எமது அரசாங்கம் சீனாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் நிலையில் பிளாஸ்ரிக் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாக பேசப்பட்டமை யாவரும் அறிந்ததே.

ஆகவே, எமது மக்கள் மரபுகளுக்கு உட்பட்டு அறங்களின் பால் மேற்கொள்ளும் கடற்றொழிலை வெளிநாட்டு சக்திகளுக்கும் பினாமி நிறுவனங்களின் தேவைக்காக மாற்றம் முயற்சியை கைவிட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டுகளின் விலை 20 ரூபாவினால் உயர்வு

கொழும்பு, ஜூன் 30

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றின், அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகளின் விலை, 20 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி, 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும், அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகளின் விலை 40 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

குறித்த விலை உயர்வு, அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இந்த நிலையில், பரிசுத் தொகையும், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும் தரகுப் பணமும், குறித்த விலை உயர்வுக்கு இணையாக அதிகரிக்கப்படும் என தேசிய லொத்தர் சபை தெரிவித்துள்ளது. (அ)

# 40,000 மில்லியன் ரூபாய் உண்டியல்கள் ஏலத்தில்

கொழும்பு, ஜூன் 30

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 5 ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 60 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# மின்சாரம் பயன்படுத்தாத 4 இலட்சத்து 50ஆயிரம் பேர்!

கொழும்பு, ஜூன் 30

மின் கட்டண அதிகரிப்பின் பின்னர் ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை 04 இலட்சத்து 50ஆயிரமாக அதிகரித்துள்ளது.

ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 03 இலட்சமாக காணப்பட்டதுடன் தற்போது 04 இலட்சத்து 50ஆயிரமாக அதிகரித்துள்ளது என மின்சார நுகர்வோர் சங்கத்தின் தலைவர் சஞ்ஜீவ தம்மிக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மின்சார சபை, மின்சாரத்துக்கான கேள்விக்கும் மேலதிகமாக கடந்த 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மற்றும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதங்களில் மின்கட்டணத்தை அதிகரித்தது.

இலங்கை மின்சார சபை இதுகுறித்த யோசனையை முன்வைத்தபோது, அது சாத்திய மற்றது எனத் தெரிவித்து அதனை நிராகரித்தோம். எனினும் எமது குரலுக்கு மின்சார சபை செவிசாய்க்கவில்லை. தற்போது தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின்கட்டண அதிகரிப்பால் மின்பாவனையாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்திருந்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மின்நுகர்வு 20 சதவீதத்தினால் குறைவடைந்தது.

அப்போது ஒரு யுனிட் மின்சாரத்தை கூட பயன்படுத்தாத 03 இலட்சம் குடும்பங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை தற்போது 04 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபைக்கே தற்போது கணிசமான நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் மின்கட்டண அதிகரிப்பை நாம் எதிர்த்தோம்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தத்தை அங்கீகரிப்பதில் மின் நுகர்வோர் மற்றும் பல்வேறு தொடர்புடைய தரப்பினரால் முன்வைக்கப் படும் நியாயத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கருத்தில் கொள்ளவேண்டும்-என்றார்.

# தெற்கு மக்களுக்கான உரிமைகளை போல தமிழ் மக்களுக்கும் வலியுறுத்தியவர் மைத்திரி!

## அங்கஜன் இராமநாதன் எம். பி.

யாழ்ப்பாணம், ஜூன் 30

தெற்கிலுள்ள மக்களைப் போல் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எனக் கூறியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

மக்கள் நலன் பேணும் அமைப்பின் கட்டடத் திறப்பு விழா நேற்று கோண்டாவிலில் நடைபெற்றது. இதில், உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 21 தடவையும் அதன் பின்னரும் யாழ்ப்பாணத்துக்கு அதிக தடவைகள் வந்தவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா உள்ளார். நான் சிறீ லங்கா சுதந்திர கட்சியைத் தெரிவு செய்தது சரியென்று அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி எடுத்துள்ள முடிவுகள் குறித்து நிற்கின்றன.

தமிழ் மக்களின் அபிலாசைகளை விளங்குவதற்காக சகல தரப்பினரையும் சந்தித்து அவர்களின் தேவைகளையும் பிரச்னையையும் விளங்கி கட்சியை முன்னிலைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தெரிவித்தார். தமிழ் மக்களின் காணிகளை மறுபடியும் வழங்குமாறும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தீர்வு வழங்குமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தியிருந்தார். தெற்கிலுள்ள மக்களைப் போல் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியவர் என்றும் சொன்னார். (ஐ)

# தண்டவாளத்தில் ஆணிகளை அகற்றும் போதைப்பொருள் பாவனையாளர்கள்!

கொழும்பு, ஜூன் 30

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் போதைப்பொருள் வாங்குவதற்காக ரயில்வே தண்டவாளங்களில் உள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுவதால் பெரும்பாலான ரயில்கள் தடம் புரள்கின்றன என ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் வி.எஸ். பொல்வத்தகே தெரிவித்தார்.

இது தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து மாலை நான்கு மணியளவில் கொஸ்கம நோக்கி புறப்பட்ட பயணிகள் ரயில் பேஸ்லைன் ரயில் நிலையத்துக்கும் கோட்டே ரோட் ரயில் நிலையத்துக்கும் இடையிலான பகுதியில் தடம் புரண்டது.

ரயில் இயந்திரம் உட்பட மூன்று ரயில் பெட்டிகள் இவ்வாறு தடம் புரண்டன.

இதனால் களனிவெளி பாதையின் ரயில் சேவைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் போதைப்பொருளுக்காக தண்டவாளங்களில் பொருத்தப்பட்டுள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுகிறார்கள்.

இவ்வாறான சம்பவம்தான் பேஸ்லைன் - கோட்டை வீதி ரயில் நிலையத்தை அண்மித்த ரயில்வே பாதையில் இடம் பெற்றுள்ளது. இதனால் ரயில் தடம்புரண்டது.

போதைப்பொருள் பாவனையாளர்கள் தாம் செய்வது எவ்வளவு பெரிய பாரதூரமான செயல் என்பதை அறிவார்களா என்பது சந்தேகத்துக்குரியது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் அல்லது ரயில்வே பாதுகாப்பு தரப்பினரிடம் முறைப்பாடு அளிக்கவேண்டும்-என்றார்.





வரலாற்று பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் 10ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் மஞ்சத் திருவிழாவின் காட்சி...!

ஈழநாடு
Eelanadu
30.06.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ரணிலுக்கான தமிழ் கட்சிகளின் பதில் என்ன?

பேச்சுக்கு தமிழ் கட்சிகள் ஒன்றாக வரவேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இதற்கு பின்னால் இரண்டு கருத்துக்கள் மறைந்திருக்கின்றன - ஒன்று தமிழ் கட்சிகள் ஒருபோதும் ஒன்றாக வரப்போவதில்லை என்பது - அடுத்தது, தமிழ் கட்சிகளை தனித்தனியாகத் தங்களால் கையாள முடியுமென்பது. ஏனெனில், ஒன்றாக வாருங்கள் பேசுவோம் என்பது ஒரு புதிய வாதமல்ல. மாறாக, நீண்டகாலமாக சிங்கள தலைமைகள் கூறிவருகின்ற ஒரு விடயம்தான். இதனை இப்போது ரணில் கூறுகின்றார். அண்மையில், இங்கிலாந்தில் தமிழ் புலம்பெயர் சமூகத்துடன் கலந்துரையாடிய அண்ணாமலை தமிழ் கட்சிகள் இந்தியாவிடம் ஒன்றாக வரவேண்டுமென்று கூறியிருந்தார்.

இந்த இடத்தில் தமிழ் கட்சிகளின் தலைமைகள் கேட்க வேண்டிய கேள்வி நாங்கள் ஒன்றாக வந்தால் நீங்கள் எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்களா - அதனை பகிரங்கமாக சிங்கள மக்கள் முன்னால் வையுங்கள். முதலில் தென் பகுதியிலிருக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக தமிழ் மக்களுக்கு எதை வழங்குவீர்களென்று கூறுங்கள். ஆனால், தமிழ் கட்சிகளோ விடயங்களை தர்க்க ரீதியாக முன்வைப்பதில்லை.

அண்ணாமலையை நோக்கி பிரித்தானிய தமிழ் பேரவை ஒரு கேள்வியை முன்வைத்திருக்க வேண்டும் - அதவாது, நாங்கள் ஒன்றாக வந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியா அதன் உச்சபட்ச பலத்தை பிரயோகிக்குமா? ஏனெனில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேவைப்பட்டால் மீளவும் இந்தியா படைகளையும் அனுப்ப முடியும். அவ்வாறானதொரு வாக்குறுதியை பாரதிய ஜனதா கட்சியால் வழங்க முடியுமா? ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், ஒன்றாக வாருங்கள் - உங்களிடம் ஒற்றுமையில்லை - அதுதான் பிரச்னை என்றவாறு விடயத்தை திசைதிருப்பும் வகையிலேயே சிங்கள ஆளும் தரப்பு நடந்துகொள்கின்றது. ஆனால், மறுபுறம் சிங்கள ஆளும் தரப்பு தமிழ் மக்களின் பிரச்னையில் ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றதா என்றால் அப்படியில்லை.

இந்தப் பின்புலத்தில், தமிழ் கட்சிகள் ஒன்றாக வரவேண்டுமென்று ரணில் கூறுவது வேடிக்கையானது - அதற்கு வலுவான எதிர்வினையாற்ற முடியாமல் தமிழ்த் தலைமைகள் என்போர் இருப்பது அதிலும் வேடிக்கையானது. ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலபடுத்தப்போவதாக கூறினார் - ஆனால், இதனை ஓர் உள்நோக்கத்தோடுதான் அவர் கூறியிருக்கின்றார் என்பது இப்போது தெளிவாகின்றது. ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்டம் என்றவுடன் யாழ்ப்பாணத்து வீதிகளில் இறங்கி எதிர்ப்பு தெரிவிக்கவும் ஒரு கட்சி இருக்கின்றது - அதேவேளை, சமஷ்டியை போடாவிட்டால் மோடிக்கான கடிதத்தில் கையெழுத்திட மாட்டேன் என்று - கூறி அடம்பிடித்த சம்பந்தன் தலைமையிலான அணியும் இருக்கின்றது. இதனை ரணில் நன்கறிவார்.

ரணில் இப்போது, ஒன்றாக வாருங்கள் என்று சொல்வதற்கு பின்னால் அவரின் தந்திரம் தெரிகின்றது. இதனைப் புரிந்துகொள்ளாமல் தமிழ் கட்சிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. ரணிலை நோக்கி தமிழ் கட்சிகள் கூற வேண்டும் - 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றோம் - நீங்கள் அதனை அமுல்படுத்தும் விடயத்தில் முன்னேற்றத்தை காண்பியுங்கள். முதலில் மாகாண சபை தேர்தலை நடத்துங்கள். அதன் பின்னர் ஒன்றாக உங்களுடன் பேசுவதைப் பற்றி நாங்கள் தீர்மானிக்கின்றோம். ஒன்றாக வாருங்கள் என்பதை ஒரு தந்திரமாக மற்றவர்கள் பயன்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் அனுமதிக்கக்கூடாது. ஒன்றாக வந்தாலும் வராவிட்டாலும் ஒரு சமூகத்தின் அடிப்படையான பிரச்னைகளைப் புறம்தள்ள முடியாது. தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை இழுத்தடிக்கும் ஒரு சூழ்ச்சிக் கதைதான் ஒன்றாக வாருங்கள் என்பது.

# ஜனாதிபதி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முயல்கின்றார்!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஜூன் 29

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகளை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி அவரின்அரசியலுக்கு ஆதாயம் தேடுவதற்காகவே கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகள் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு, இந்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகளை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. அவை எவையும் அரசாங்கக் கொள்கைகள் அல்ல. நாங்கள் 16 முறை சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றுள்ளோம். ஒப்பந்தங்கள் மற்றும் சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதில்லை.

ஒரு புதிய சட்டத்தையோ, அல்லது பழைய சட்டத்தையோ மாற்றினால்தான் பாராளுமன்ற கூட்டப்படும். அப்படியென்றால் இந்த அரசாங்கம் என்ன செய்கிறது? எதிர்க்கட்சிகளை இதில் ஈடுபடுத்தி அரசியல் ஆதாயம் பெறவே இது பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

நான் எப்போதும் கூறுகின்ற ஒரு விடயம், அரசாங்கம் நாட்டை வங்குரோத்து ஆக்கியது நிதியமைச்சும் அரசாங்கமும் மத்திய வங்கியும் சேர்ந்துதான். இதனாலேயே, இந்த பிரச்னைகள் அனைத்தும் தோன்றின.

அரசு முன்வைக்கும் முன்மொழிவுகளில் சில தெளிவற்ற பகுதிகள் உள்ளன. பெரிய வார்த்தைகளை பயன்படுத்தி, சாமானியர்களுக்கு புரியாத வகையில் உண்மையை மறைக்கின்றனர். ஆனால், இந்த திட்டத்தில் ஒன்று தெளிவாக தெரிகிறது, இது ஊழியருக்கான அரசின் முன்மொழிவு.

வருங்கால வைப்பு நிதி மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள். மறுசீரமைப்பு திட்டத்தில் பங்கேற்றால், வருங்கால வைப்பு நிதிகள் வைத்திருக்கும் கருவூலப் பத்திரங்களின் முதிர்வு காலம் 2027 முதல் 2038 வரை நீட்டிக்கப்படும் - என்றார். (ஐ)

# பேராதனை வைத்தியசாலையில் நோயாளியின் மீது அமிலம் வீச்சு!

கொழும்பு, ஜூன் 30

பேராதனை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் மீது அமில வீச்சு தாக்குதலை நடத்திய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமில வீச்சு தாக்குதலுக்கு உள்ளான நபருக்கும், தாக்குதல் நடத்திய நபரின் மனைவிக்கும் இடையில் திருமணத்துக்கு புறம்பான உறவு இருந்து வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக கோபத்தில் இருந்து வந்த பெண்ணின் கணவன், இந்த அமில வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டார்.

தாக்குதலின்போது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்றிருந்த மேலும் சிலர் காயமடைந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டார். சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இசைவேள்வியின் இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 30


அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் “சிறீ ராம நாம கானாமிர்தம்” இசை வேள்வி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நாதஸ்வர வித்துவான் எஸ். சிதம்பரநாதன் நினைவரங்கத்தில் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுக்கு யாழ். மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் தலைமையுரை ஆற்றுவார்.

தொடர்ந்து, இசையரங்கில் லோ. சாய்லக்ஷ்மி பாட்டு இசைக்க, வாசுகி சுவாமிநாதன் சர்மா வயலின், பிரம்மசிறீ க. சுவாமிநாதன் சர்மா மிருதங்கம், சு. அனந்தநாராயணன் சர்மா கஞ்சிரா இசைப்பர்.

இசைப் பேரரங்கு நிகழ்வில் தமிழ்நாட்டை சேர்ந்த சங்கீத கலாநிதி நெய்வேலி ஆர். சந்தானகோபாலன் பாடல் இசைக்க, வி. எஸ். கோகுல் வயலின், டில்லி எஸ். சாய்ராம் மிருதங்கம், எஸ். கிருஷ்ணா கடம் இசைப்பர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜுன் - 30 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆனி 15**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | துவாதசி |




**மேடம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
உங்கள் குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**தனுசு**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
குடும்பத்தில் மனம்விட்டுப் பேசுவது நல்லது. மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சிந்தனைத்திறன் பெருகும்.

**கும்பம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உற்சாகமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் பணியாட்களால் பதற்றம் ஏற்படும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

# தி. மு. க. நடத்துவது குடும்ப ஆட்சிதான்

## பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் பதில்

சென்னை, ஜுன் 30

தி. மு. க. நடத்துவது குடும்ப அரசியல்தான் என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

திருமண நிகழ்வு ஒன்றில் நேற்று பங்கேற்றபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இன்றைக்கு நல்லதைகூட ஜாக்கிரதையாக ஒருமுறைக்கு பலமுறை யோசித்து தான் செய்ய வேண்டி உள்ளது. எதிர்க்கட்சியாக இருந்தபோதுகூட உடனுக்குடன் எதையும் செய்துவிட முடியும். ஆனால், இப்போது நாம் ஆட்சியில் இருப்பதால் ஒவ்வொன்றையும் யோசித்து செய்ய வேண்டியுள்ளது.

பிரதமராக இருக்கக்கூடிய மோடி 2 நாட்களுக்கு முன்பு தி. மு. க. பற்றி ஓர் உரையாற்றி இருக்கிறார். அதில் தி. மு. க. குடும்ப அரசியலை நடத்துகிறது. தி. மு. க. வெற்றி பெற்றால் அவர்களின் குடும்பம்தான் வளர்ச்சி அடையும் என்று பேசி இருக்கிறார். ஆமாம் தி. மு. க. ஒரு குடும்பம்தான். அப்படி சொன்னதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், அவர் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தி. மு. க. குடும்பம் குடும்பமாக அரசியல் நடத்தி வளர்ச்சி அடைந்து வருவதாக பேசி உள்ளார்.

நாட்டின் பிரதமராக இருக்கும் மோடிக்கு வரலாறு தெரியவில்லை. பேரறிஞர் அண்ணா கட்சி தொடங்கிய போது தம்பி தம்பி என்று தொண்டர்களை அழைப்பார். கலைஞர் பேசும் போது அனைவரையும் உடன் பிறப்பே என்று அழைத்தார். அது அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் அக்காவாக இருந்தாலும் தங்கையாக இருந்தாலும் அத்தனை பேரையும் உடன்பிறப்பே என்றுதான் அழைப்பார். ஆக இது உள்ளபடியே குடும்ப அரசியல்தான். கட்சியினரை தம்பி என அழைத்தவர் அண்ணா.

பிரதமர் மோடி பொருத்தமாகத்தான் பேசியிருக்கிறார். பல போராட்டங்களில் தி. மு. கவினர் குடும்பம், குடும்பமாக பங்கேற்று சிறைக்கு சென்றிருக்கின்றனர். தி. மு. கவுக்கு தமிழர்களும் தமிழ்நாடும்தான் குடும்பம் என்றார்.

(ஐ)

# பல இன, மொழி நாடான இந்தியாவுக்கு பொது சிவில் சட்டம் சாத்தியம் இல்லை

## காங்கிரஸின் தமிழ்நாடு தலைவர்

சென்னை, ஜுன் 30

பல்வேறு இனம், மொழி பேசும் மக்கள் உள்ள நாட்டில் பொது சிவில் சட்டம் சாத்தியமற்றது என தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் சென்ற அவர் அங்கு செய்தியாளர்களை சந்தித்தபோது,

“மணிப்பூர் மாநிலத்தில் பிரச்னையை உருவாக்கியவர்களே பா. ஜ. கவினர்தான். மோடி நினைத்திருந்தால் இராணுவத்தை வைத்து ஒரே நாளில் பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். மக்களை பிரித்தால் தான் வெற்றி பெற முடியும் என பா. ஜ. க. நினைக்கிறது.

அதுவே, ஆர். எஸ். எஸ். அமைப்பின் சித்தாந்தமும். மக்களை மதத்தால் சாதியால் பிரித்து ஆள வேண்டும் என்பதே அதன் நோக்கம். பல்வேறு மொழி, பல்வேறு இனம், பல்வேறு கலாசாரங்கள் உள்ள இந்தியாவில் பொது சிவில் சட்டம் என்பது ஏற்புடையது அல்ல” - என்றார்.

(ஐ)

# இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியாவின் முடிவுக்கு பாராட்டு

## பிரிட்டன் தமிழர் கூறினர் என்கிறார் அண்ணாமலை

சென்னை, ஜுன் 30

இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியா எடுத்த முடிவுக்கு இங்கிலாந்து தமிழர்கள் பாராட்டு தெரிவித்தனர் என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரிட்டன் சென்று திரும்பியுள்ள அண்ணாமலையை சென்னை விமான நிலையத்தில் நேற்று பா. ஜ. கவினர் வரவேற்றனர். இதன்போது செய்தியாளர்களை சந்தித்த அவர்,

இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பா. ஜ. க. சார்பில் பங்கேற்ற சென்றேன், பிரிட்டன் பாராளுமன்றத்தில் எம். பி.க்களுடன் உரையாற்றினேன். இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியா எடுத்த முடிவுக்கு இங்கிலாந்து தமிழர்கள் பாராட்டு தெரிவிக்கின்றனர்.

வட, கிழக்கு பகுதியில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக பிரதமர் செய்த பணிகளை இங்கிலாந்தில் உள்ள இலங்கை தமிழர்கள் பாராட்டுகிறார்கள். இங்கிலாந்தில் உள்ள தமிழர்கள் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளனர்.

எனது நடைபயணத்தை தொடங்கி வைக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வர உள்ளார். அவர் திகதிக்கு காத்திருக்கிறோம். இரண்டு நாட்களில் திகதி பற்றி தகவல் வரும். எனவே, ஜுலை இரண்டாவது அல்லது மூன்றாவது வாரம் நடை பயணத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

(ஐ)

# மோடி தமிழகத்தில் போட்டியிட்டால் பெருமை

## இராதகிருஷ்ணன் தெரிவிப்பு

புதுச்சேரி, ஜுன் 30

பிரதமர் மோடி தமிழகத்தில் போட்டியிட்டால் பெருமைதான் என்று முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் புதுச்சேரி மாநில பா. ஜ. க. தலைமை அலுவலகத்தில் நேற்ற செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

பிரதமர் நரேந்திர மோடி உலக நாடுகளே வியக்கும் வகையில் இந்தியாவை முன்னேற்றியுள்ளார். அதனால் உலகத் தலைவர்கள் அவரை வழிகாட்டியாகக் குறிப்பிடுகின்றனர். பொது சிவில் சட்டத்தை அனைவரும் ஏற்க வேண்டியது அவசியம். புதுச்சேரி முதல்வருக்கு ஒத்துழைக்காத அதிகாரிகள்மீது முதல்வரே முறைப்படி நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக அனைத்து அதிகாரிகளையும் குறை கூறுவது சரியல்ல.

தமிழகத்தில் இராமநாதபுரம் மட்டுமல்ல, நாட்டின் 543 மக்களவைத் தொகுதிகளில் எங்கு போட்டியிட்டாலும் பிரதமர் நரேந்திர மோடி வெற்றி பெறுவார். தமிழகத்தில் அவர் போட்டியிட்டால் நமக்கு பெருமைதான். பிரதமர் எங்கு போட்டியிட வேண்டும் என்பதை கட்சிதான் முடிவுவெடுக்கும். அவரால்கூட முடிவெடுக்க முடியாது. சிதம்பரம் நடராஜர் கோயில் விவகாரத்தில் பேசித்தான் தீர்வு காண முடியும் - என்றார். (ஐ)

# ஊழியர் சேமலாப நிதியில் அரசாங்கம் கை வைக்காது!

## மத்திய வங்கி ஆளுநர் உறுதி

கொழும்பு, ஜூன் 30

**ஊழியர் சேமலாப நிதி மீது அரசாங்கம் கை வைக்காது என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.**

**கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழியர் சேமலாப நிதி மீது அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது. எனவே மக்களின் நிதிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 9 வீத வட்டிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதுடன், வங்கிகளில் வைப்பு செய்துள்ள 57 மில்லியன் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாது.



வங்கிகள் ஏற்கனவே 50 வீதத்துக்கும் அதிகமான வரிகள் மூலம் திறைசேரிக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு செய்துள்ளதால் அவற்றின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறும் வரை ஊகங்களைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக அறிவித்துள்ளது-என்றார். (அ)

# அஸ்வெசும முறைப்பாடுகளுக்கு ஜனாதிபதியால் ஒரு வாரத்தில் தீர்வு

கொழும்பு, ஜூன் 30

அஸ்வெசும எனப்படும் ஆறுதல் நலன்புரி கொடுப்பனவு தொடர்பில் இதுவரை 3 இலட்சத்து 83 ஆயிரத்து 232 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 5 ஆயிரத்து 45 ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அஸ்வெசும அறுதல் நலன்புரி வேலைத்திட்டம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகளுக்கு, ஒரு வாரத்துக்குள் தீர்வை வழங்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.



விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவின் கீழ், சிறுநீரக நோயாளர்கள், முதியவர்கள் மற்றும் விசேட தேவையுடையோர் அடங்கிய பயனாளிகளின் பட்டியல் இந்த வார இறுதியில் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிவித்தார். (அ)

# மீண்டும் மலேரியா அபாயம்!

கொழும்பு, ஜூன் 30

2016 ஆம் ஆண்டு மலேரியாவை ஒழித்த நாடாக அறிவிக்கப்பட்ட இலங்கையில் மீண்டும் மலேரியா பரவி வருவதாக வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டின் பல பகுதிகளில் இருந்து மூன்று வெளிநாட்டவர்கள் உட்பட 20 மலேரியா நோயாளர்கள் பதிவாகியுள்ளனரென தெரிவிக்கப்படுகின்றது.

மலேரியா தொடர்பான சந்தேகங்களுக்கு 24 மணி நேரமும் 071 - 284 1767 மற்றும் 0117 626626 என்ற எண்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களுக்குத் தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் அறிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு போலி கடவுச்சீட்டு தயாரித்த வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர் கைது!

வவுனியா, ஜூன் 30

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் நாட்டில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்த திட்டமிட்ட குற்றவாளிகளுக்கு பொய்யான தகவல்கள் அடங்கிய கடவுச்சீட்டை தயாரித்த குற்றச்சாட்டில் வவுனியா மற்றும் அனுராதபுரம் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண், பெண் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பிரதேச செயலகத்தின் பிரதம எழுதுநர் மற்றும் அநுராதபுரம் பிரதேச செயலகத்தின் அலுவலர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் புகைப்படங்களுடன் தயாரிக்கப்பட்ட 13 கடவுச்சீட்டுக்கள், அண்மைக்காலத்தில் நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளின் 6 தேசிய அடையாள அட்டைகள், பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சின் கடிதத் தலைப்புகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கடிதத் தலைப்புகள், அரசு நிறுவனங்களின் அதிகாரிகளின் பதவியைக் கொண்ட ரப்பர் முத்திரைகள், சந்தேக நபர்களிடம் ஆறு கைபேசிகள், கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மற்றும் ஏராளமான திருமணம் மற்றும் பிறப்புச் சான்றிதழ்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# வைத்தியசாலை கூரையிலிருந்து சத்திர சிகிச்சை கருவிகள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 30

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிலையம் ஒன்றின் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 09 மில்லியன் ரூபாய் பெறுமதியான சத்திர சிகிச்சை கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றில் கூடிய அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) கூட்டத்தின்போது, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி. சி. விக்கிரமரத்ன இது குறித்து தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு அதிகாரிகளிடம் கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் இதன்போது தெரிவித்தார்.

எனவே, சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து உண்மைகளை வெளிக்கொணரும் பணியை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்துக்கு சுகாதாரத்துறை அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 30

காலாவதியாகும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகவுள்ளது.

அதற்கமைய, கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் நாளை வரையில், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், விநியோகிக்கப்பட்ட தினத்தில் இருந்து இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் வலையமைப்பின் முகவராக செயல்பட்ட யுவதி கைது!

கொழும்பு, ஜூன் 30

டுபாயில் வசிக்கும் தர்மா என்றழைக்கப்படும் தர்மசிறி பெரேரா என்ற நபரின் வழிகாட்டுதலின் பேரில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 33 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூ.4.5 கோடி ரூபாய் நேற்று முன் தினம் முடக்கப்பட்டது.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினரின் தகவலின்படி, பெண் கைது செய்யப்பட்டபோது, சந்தேக நபரிடம் இருந்த 1.875 மில்லியன் ரூபாவும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரிகா ரஜினி செல்வதுரை என்ற பெண்ணே கைது செய்யப்பட்டார்.

5000 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் அங்குலான பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ. 1.875 மில்லியன் பணமும் மீட்கப்பட்டது.

இதையடுத்து, 2006 ஆம் ஆண்டின் பணமோசடி தடுப்புச் சட்டம் எண். 5 இன் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவுக்கு விசாரணையை ஒப்படைக்க அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மொறட்டுவை நீதிவான் நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததையடுத்து, இதற்கான அனுமதி வழங்கப்பட்டு மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவை அங்குலான சயுருபுர பிரதேசத்தில் வாடகை அடிப்படையில் வசிக்கும் சந்தேக நபரின் பெயரில் மொறட்டுவையில் உள்ள நான்கு தனியார் வங்கிகளில் பேணப்பட்டுள்ள நான்கு கணக்குகள் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், 2021 ஆம் ஆண்டு ஜோர்தானில் பணிப்பெண்ணாக இருந்தபோது முகநூல் ஊடாக பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான தர்மசிறி பெரேராவை அறிந்து கொண்டார். அந்த ஆண்டின் முதல் பாதியில் அவர் இலங்கைக்குத் திரும்பிய போது, அவருக்கு வேலை வாய்ப்புத் தருவதாக தர்மசிறி உறுதியளித்தார். அவர் நாடு திரும்பிய போது மற்றொரு பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரி வங்கிக் கணக்கிலக்கத்தை வாங்கியுள்ளார்.

அதன்படி, சந்தேக நபரான பெண் கணக்கு எண்ணைக் கொடுத்ததையடுத்து, அதில் ரூ.2 மில்லியன் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன், தர்மசிறி ஐ.எம்.ஓ தொழில்நுட்பத்தின் ஊடாக மேற்கொண்ட தொலைபேசி அழைப்பின் பிரகாரம் அங்குலானவில் தங்கியிருந்த பெண்ணின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவரது கணக்குகள் இரண்டு வங்கிகளில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும், இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது, அவரிடம் மேலும் இரண்டு தனியார் வங்கிகளில் கணக்குகள் இருப்பதை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடிந்தது.

அந்த வங்கிக் கணக்கு ஒன்றில் இரண்டு மாதங்களுக்குள் 2 கோடி ரூபாய் அதிக மான பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற கூடுதல் உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட 4.5 கோடி ரூபாய் பணம் முடக்கப்பட்டுள்ளது. (அ)

# பாரதூரமான நெருக்கடியில் சிக்கிக்கொள்ளவுள்ளது நாடு!



## வசந்த யாப்பா பண்டார எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

**அரசாங்கம் வெளிநாட்டுக் கடனை திரும்பச் செலுத்துவதை நிறுத்தியுள்ளதன் காரணமாக ஓரளவு டொலர் தொகை நாட்டில் மீதமாக இருப்பதாகவும் அதனைப் பயன்படுத்தி அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்து வருகிறது எனவும் சுதந்திர மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.**

இது நரகத்துக்கு வழங்கப்பட்டுள்ள இடைவேளை போன்றது. வெளிநாட்டு கடனைச் செலுத்த ஆரம்பித்ததும் நாடு பாரதூரமான நெருக்கடிக்குள் சிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ராஜகிரியவில் உள்ள அந்த கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வருடாந்தம் 450 கோடி டொலர் வெளிநாட்டு கடன் செலுத்தப்பட்டு வந்தது. அரசாங்கம் தற்போது அந்த தொகையை மீதப்படுத்தியுள்ளது.

இதனை பயன்படுத்தியே மருந்து, எரிபொருள், உணவு பொருட்கள் மற்றும் அத்தியவசிய மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

தற்போது வரிசைகள் இல்லை என்பது போல் மக்களுக்கு தோன்றும். மீதப்படுத்தியுள்ள 450 கோடி டொலர்களை பயன்பத்தியே அரசாங்கம் பால் மா உட்பட பொருட்களை இறக்குமதி செய்கிறது. அரசாங்கத்தினால், இதனை தொடர்ந்தும் செய்ய முடியாது.

எதிர்காலத்தில் யாதார்த்ததை எதிர்கொள்ள நேரிடும். எதிர்காலத்தில் 450 கோடி வெளிநாட்டு கடனை திரும்ப செலுத்த நேரிடும்.

நரகத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள காலத்தில் மக்களால், உண்மையான நிலைமையை புரிந்துக்கொள்ள முடியாது.

இலங்கை அரசுக்கு தேசிய ரீதியில் 4300 கோடி டொலர் கடனும் சர்வதேச ரீதியில் 4200 கோடி டொலர் கடனும் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எமது நாட்டின் பிரதிநிதிகள் அமெரிக்காவுக்கு சென்று அனைத்து கடனை உரிமையாளர்களை சமமான கவனிப்பதாக கூறினர்.

தேசிய கடனை எப்படி முகாமைத்துவம் செய்ய போகிறீர்கள் என நாங்கள் அரசாங்கத்திடம் தொடர்ந்தும் கேட்டு வந்தோம். எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

அரச வங்கிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் வைக்க போவதில்லை என மத்திய வங்கியின் ஆளுநரும் ஜனாதிபதியும் கூறுகின்றனர். எனினும் உண்மையை மறைத்து அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெற்றுக்கொண்ட உக்ரைன், செக் குடியரசு, ஈராக், ஈக்வடோர், மொங்கோலியா, பாகிஸ்தான், மோல்டா உட்பட பல நாடுகள் நாணய நிதியதின் உதவியை பெற்றுக்கொள்ளும் போது,தேசிய கடனை மறுசீரமைப்பது தொடர்பில் சரியான முடிவுகளை எடுத்தன.

இந்த நாடுகள் தேசிய கடனை மறுசீரமைக்காது, வெளிநாட்டு கடன்களை மாத்திரமே மறுசீரமைத்தன.

எனினும் எமது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தேசிய கடனை மறுசீரமைப்பை கைவிடுவதற்கான முனைப்புகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

தேசிய கடன் இரத்துச் செய்யப்பட்டால், இலங்கையின் அரச வங்கிகளில் வைப்புச் செய்துள்ளவர்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தில் நிதியை கொண்டுள்ள சாதாரண உழைக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகுவார்கள்-என்றார். (அ)

# புத்தூரில் இரு இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல்

## பெண்களின் படங்களை ஆபாசமாகச் சித்தரித்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமது ஊர் பெண்களின் படங்களை ஆபாசமாகச் சித்தரித்து சமூக ஊடகங்களில் வெளியிட்டார்கள் எனக் கூறி இரு இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்த ஊரவர்கள் இளைஞர்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் பொலிஸார் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

புத்தூர் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது.

புத்தூர் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் பெண்களின் படங்கள் கணினி வரைகலை (கிராபிக்ஸ்) மூலம் ஆபாசப் படங்களாக மாற்றம் செய்யப்பட்டு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊரவர்கள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ஊரில் உள்ள இரு இளைஞர்களே அவ்வாறு பெண்களின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர் எனக் குற்றம் சாட்டி , அந்த இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்த



ஊரவர்கள் இளைஞர்கள் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் வீட்டினுள் இருந்த பெறுமதியான பொருட்களை அடித்து உடைத்தும், வீட்டின் முன் நின்ற வாகனங்களை அடித்து உடைத்தும் அவற்றுக்குத் தீ வைத்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலி பொலிஸார், தாக்குதலில் காயமடைந்த இளைஞர்களை அங்கிருந்து மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முயன்றபோது, பொலிஸாருடன் ஊரவர்கள் முரண்பட்டதுடன் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் காயமடைந்த நிலையில் , நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதையடுத்து அங்கு கூடியிருந்த ஊரவர்களை அவ்விடத்தில் இருந்து அகற்றிவிட்டு, காயமடைந்த இரு இளைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரை மீட்ட பொலிஸார், அவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஐந்து மாதங்களில் 199 யானைகள் பலி

கொழும்பு, ஜூன் 30

நடப்பாண்டில் ஜனவரி மாதம் முதல் ஜூன் முதல் வாரம் வரையான காலப்பகுதியில் 199 யானைகள் உயிரிழந்தன என்று வனவி லங்குகள் பாதுகாப்புத் திணைக் களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில யானைகள் இயற்கையாக உயிரிழந்துள்ளதுடன் மேலும் சில ரயில்களில் மோதுண்டு விபத்துக்குள்ளாதல், மனிதர்களால் மேற்கொள்ளப்படும் வெடி வைத்தல் சம்பவங்கள், வாகனங்களில் மோதுண்டு விபத்துக்குள்ளாதல், நீரில் அடித்துச் செல்லல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உயிரிழந்தன என்று அந்த திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு 439 யானைகள் உயிரிழந்துள்ள நிலையில், 2020ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் உயிரிழக்கும் யானைகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளன.

இதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு 328 யானைகளும் 2021 ஆம் ஆண்டு 375 யானைகளும் உயிரிழந்தன.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு முதல் இம்மாதம் 07ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பல்வேறு காரணங்களால் 03ஆயிரத்து 976 யானைகள் உயிரிழந்தன.

அந்தவகையில் 2010ஆம் ஆண்டு 227 யானைகளும் 2011 ஆம் ஆண்டு 255 யானைகளும் 2012ஆம் ஆண்டு 250 யானைகளும் 2013ஆம் ஆண்டு 206 யானைகளும் 2014ஆம் ஆண்டு



231 யானைகளும் உயிரிழந்தன.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு 205 யானைகளும் 2016ஆம் ஆண்டு 279 யானைகளும் 2018ஆம் ஆண்டு 319 யானைகளும் 2019ஆம் ஆண்டு 409 யானைகளும் உயிரிழந்துள்ளன.

2010ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப்பகுதிக்குள் பொலனறுவை வனவிலங்குகள் பிராந்தியத்துக்குள்ளேயே அதிக எண்ணிக்கையிலான யானைகள் உயிரிழந்தன.

மேற்படி பொலனறுவை வனவிலங்குகள் பிராந்தியத்துக் குட்பட்ட பகுதியில் 917 யானைகள் உயிரிழந்தன.

அத்தோடு, 2010ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் கிழக்கு மாகாண வனவிலங்குகள் பிராந்தியத்துக்குள் 738 யானைகள் உயிரிழந்துள்ளன.

அதேபோன்று அநுராதபுரத்தில் 551 யானைகளும் வடமேல் மாகாணத்துள் 435 யானைகளும் உயிரிழந்தன என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மக்கள் ஆணையின் ஊடாக அதிகார மாற்றம் வேண்டும்

## அவுஸ்திரேலியாவில் கூறினார் அநுரகுமார

கொழும்பு, ஜூன் 30

**தேர்தல் ஊடாக ஆட்சியை அமைக்கவேண்டும் என்பதே மக்கள் விடுதலை முன்னணி தற்போது தெரிவு செய்துள்ள வழிமுறை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவேண்டும் என்ற வழியையே மக்கள் விடுதலை முன்னணி தெரிவு செய்துள்ளது.

இதனால், இந்த வழிமுறைக்கு இணங்கும் அணிகளுடன் அடுத்த கட்ட செயற்பாடுகளை தெரிவு செய்ய முடியும்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஊடாக அதிகார மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற கூறப்படும் நிலைப்பாடுகளை நிராகரிக்கின்றேன்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையை கைப்பற்றி பிடித்துக்கொண்டிருப்பது அதிகார மாற்றமல்ல.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாக அதிகார மாற்றத்தை ஏற்படுத்தும் வழிமுறையில் மக்கள் விடுதலை முன்னணி இல்லை.



மக்களின் ஆணையின் ஊடாகவே அதிகார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது கட்சியின் நிலைப்பாடு-என்றார். (அ)

# அனுஷ பெல்பிட்ட இராஜினாமா?

கொழும்பு, ஜூன் 30

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் அனுஷ பெல்பிட்ட தனது இராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அனுஷ பெல்பிட்டவை கையாளும் விதம் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் வெகுசன ஊடக அமைச்சின் செயல்பாடுகள் மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்தும் கோப் குழுவில் கேள்வி எழுப்பப்பட்டது.

கெஹலிய ரம்புக்வெல ஊடகத்துறை அமைச்சராக இருந்தபோது வெளியாட்கள் இருவரை ஆலோசகர்களாக நியமித்து அவர்களுக்குச் சம்பளம் வழங்கியமை குறித்தும் இதன்போது தகவல் வெளியாகியிருந்தது.

லேக் ஹவுஸ் தொடர்பில் உண்மைகளைக் கண்டறியும் நோக்கில் ஒன்றுகூடிய கோப் குழுவிலும் அனுஷ பெல்பிட்ட முன்னிலையாகியிருந்தார்.

வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக அனுஷ பெல்பிட்ட செயல்படும் அதேவேளை, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராகவும் அவரால் எவ்வாறு செயற்பட முடியும் என கோப் குழுவில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த பெல்பிட்ட, இரு நியமனங்களும் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

அனுஷ பெல்பிட்ட கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தொலைத்தொடர்புகள் ஆணைக் குழுவுக்குச் சொந்தமான 600 மில்லியன் ரூபாயை பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் விகாரைகளுக்கு பௌத்தர்கள் அணியும் வெள்ளை நிற ஆடைகளுக்கான துணியினை (சீல் துணி) விநியோகித்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் பின்னர் மேன்முறையீட்டில் அவர் விடுவிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சிக் காலத்தில் ஊடகப் பணிப்பாளர் நாயகமாகவும் அவர் கடமையாற்றி இருந்தார்.

கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், விமல் வீரவன்ஸ அமைச்சராக இருந்த கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பதவிக்கு அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், அமைச்சர் விமலுடன் ஏற்பட்ட பல கருத்து முரண்பாடுகளின் பின்னர், குறித்த பதவியிலிருந்து விலகுவதற்கு அனுமதி கோரி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

பின்னர் அவர் அந்த பதவியை இராஜினாமா செய்து சில நாட்களில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட தரப்பினர் பொது நிதிக்குழுவுக்கு!

கொழும்பு, ஜூன் 30

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த அரசாங்கத்தின் யோசனை தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் திறைசேரி அதிகாரிகள் சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர் பாராளுமன்ற பொது நிதிக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் பொது நிதிக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய சகல தரப்பினரும் அழைக்கப்பட்டுள்ளனரென அவர் கூறினார்.

மத்திய வங்கி, நாணயச் சபை, கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் விடயங்கள் ஆராயப்பட்டதன் பின்னர், சகல வங்கிகளின் பிரதானிகளுடனும் கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களுடன் இன்று மீண்டும் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின்போது, ஏற்படும் பிரச்னைகள் குறித்தும் ஆராயப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி துப்பாக்கிச்சூடு; இருவர் பொலிஸாரினால் கைது!

கிளிநொச்சி, ஜூன் 30

துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கிளிநொச்சி மாவட்ட குற்றபுலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வைத்து காரில் பயணித்தவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் கிளிநொச்சி மாவட்ட குற்றபுலனாய்வுப் பிரிவினர் தேடி வந்தனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர்கள் இருவரும் நேற்று பகல் திருநகர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்ட உள்ளூர் துப்பாக்கி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இரு தரப்புக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே குறித்த குற்றச் செயலுக்கு வலுச்சேர்த்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பஸ் கட்டணத்தில் திருத்தம் இல்லை

கொழும்பு, ஜூன் 30

இந்த வருடத்திற்கான வருடாந்த பஸ் கட்டணத் திருத்தம், தற்போது தேவை இல்லை என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை கூறினார்.

தற்போது அமுலில் உள்ள பஸ் கட்டணத்தை மாற்றியமைக்காமல், இதனையே தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்னை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் கெமுனு விஜயரத்ன குறிப்பிட்டார். (அ)

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூன் 30

போலி நாணயத்தாள்களுடன் இரண்டு பேரை கம்பஹா குற்ற விசாரணைப் பணியகத்தின் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கம்பஹா குற்ற விசாரணைப் பணியகத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஒருவர் மாகோவிட்ட பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து ஆறு 500 ரூபாய் நாணயத்தாள்கள், 17 ஐம்பது ரூபாய் நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து, அவருக்கு இந்த போலி நாணயத்தாள்களை வழங்கிய நபர் தெல்கொட பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

23 மற்றும் 28 வயதான இந்த சந்தேக நபர்கள், பொத்தியா கொட மற்றும் கிரிந்திவிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சமூக செயல்பாட்டாளரிடம் ரி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கிளிநொச்சி, ஜூன் 30

விவேகானந்தநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் , கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் என்பவற்றின் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் உபதலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கரைச்சிக் கோட்டக் கிளையின் செயலாளருமான கறுப்பையா ஜெயக்குமார் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பரந்தனில் உள்ள பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட இவர், ஏறத்தாழ மூன்று மணிநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கனகபுரம் துயிலுமில்ல மாவீரர் பணிக் குழுவின் தலைவரும் அதிபருமான தங்கவேலு கண்ணபிரான், செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோர் ஏற்கனவே பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அப் பணிக்குழுவின் பொருளாளரான கருப்பையா ஜெயக்குமாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை திட்டமிட்ட செயல்பாடாகத் தென்படுவதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# புற்றுநோய் மருந்துகளுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 30

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை வைத்தியர் ஆனந்த விஜயவிக்ரம தெரிவித்தார்.

மருந்துகள் பரிந்துரைக்கும் ஆணையகத்தில் கடமையாற்றும் வைத்தியர்களில் கடந்த வாரத்தில் மாத்திரம் 23 விசேட வைத்தியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு வைத்தியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதால் மருந்துகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள சிரமமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக மருந்துகள் கொள்வனவில் மட்டுமன்றி அவற்றை பரிந்துரைப்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் சுமார் 1300 மருந்துகள் உள்ளடக்கப்பட்டு இருந்த நிலையில் தற்போது அவை 850 ஆக குறைக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# அரசின் கொள்கைக்கு எதிராக ரஷ்ய இராணுவத்தில் சேரும் நேபாள இளைஞர்கள் - என்ன காரணம்?

ஸ்வச்சா ராவத்

நேபாள இளைஞரான ரமேஷ் (அவர் கேட்டுக் கொண்டதன்படி அவரின் பெயர் மாற்றப்பட்டுள்ளது) தனது குடும்பத்தின் வறுமை நிலையை போக்க விரும்பினார். அதன் காரணமாக மாணவர் விசாவில் உயர்கல்வி பயில ரஷ்யாவுக்கு சென்றார். அங்கு அவர் விரும்பியபடி படிப்பை நல்லபடியாக முடித்தார்.

இருப்பினும் அதன் பின்னர் ரஷ்யாவிலேயே நல்ல வேலைத் தேடி கொள்வதா அல்லது நேபாளத்துக்கு திரும்பி அங்கே வேலைத் தேடுவதா என்ற கேள்வி எழுந்ததால் அவர் ஒருவித மன போராட்டத்துக்கு ஆளானார்.

நேபாள அரசின் 2017 -18 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, அந்நாட்டில் வேலை இல்லாதோர் விகிதம் 11.4 சதவீதமாக இருந்தது. அதற்கு முன், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கூற்றுப்படி, நேபாளத்தில் பெரும்பாலான பணிகள் அமைப்பு சாரா துறைகளில் தான் கிடைக்கப் பெறுவதாகவும், இந்தப் பணிகளை மேற்கொள்வோருக்கு உரிய ஊதியம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது.

**வேலை கிடைப்பதில் சிக்கல்**

“வெளிநாடுகளில் படித்துவிட்டு நேபாளத்திற்கு வரும் இளைஞர்கள் அனைவருக்கும் நல்ல வேலை கிடைப்ப தில் இங்கு பல சிக்கல்கள் உள்ளன. இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கு நல்ல வேலை கிடைப்பதில்லை” என்று எம் உடனான ஆன்லைன் உரையாடலின்போது ரமேஷ் தெரிவித்தார்.

இப்படி ரமேஷ் போன்ற நேபாளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் படித்துவிட்டு வேலை தேடுவதில் சிரமங்களை சந்தித்து வந்த நிலையில் தான், உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்தது.

**ரஷ்ய ராணுவத்தில் சேர வெளிநாட்டவருக்கு வாய்ப்பு**

ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் போரில் இறந்தனர். அதன் விளைவாக ரஷ்ய ராணுவத்துக்கு நிறைய படை வீரர்கள் தேவைப்பட்டனர். இதனை கருத்தில் கொண்டு, வெளிநாட்டவரும் ரஷ்ய ராணுவத்தில் சேர வகைச் செய்யும் விதத்தில், குறிப்பிட்ட சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். ரஷ்ய நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதிக ஊதியம், ரஷ்ய குடியுரிமை பெறுவதற்கான வழிமுறைகளை எளிமையாக்குவது என ரஷ்ய ராணுவத்தில் சேர விரும்பும் வெளிநாடுகளை சேர்ந்த இளைஞர்களுக்கு அந்நாட்டு அரசு சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தது.

**ரஷ்ய ராணுவத்தில் நேபாள இளைஞர்**

ரஷ்ய ராணுவத்தில் சேர்வதற்கு அளிக்கப்பட்டிருந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள ரமேஷ் விரும்பினார்.

தான் விரும்பியபடியே ரஷ்ய ராணுவத்தில் ரமேஷ் இணைந்தார். அதற்காக அவர் மருத்துவ பரிசோதனை மற்றும் எழுத்துத் தேர்வில் வெற்றி பெற வேண்டியிருந்தது. இந்தத் தேர்வுகளை எழுத 1,00,000 நேபாளி ரூபாயை செலவழித்தார். இவ்வளவு பெரிய தொகையை தனக்கு அளித்து உதவியவர் யார் என்ற தகவலை பகிரங்கமாக கூற அவர் மறுத்துவிட்டார்.

ரஷ்ய ராணுவத்துக்கு தேர்வு செய்யப்பட்டது குறித்த தனது மகிழ்ச்சியை ‘டிக்டாக்’ பக்கத்தில் அவர் பகிர்ந்திருந்தார்.

“வாழ்வில் வெற்றி பெற்று விடுவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தப் பணியை தேர்ந்தெடுத்துள்ளேன்” என்றும் அந்தப் பதிவில் ரமேஷ் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்துள்ளது எவ்வளவு கடினமான முடிவு என்பது குறித்தும் அவர் தன் வீடியோ பதிவுகளில் தெரிவித்திருந்தார்.

‘செய் அல்லது செத்து மடி” என்பது ராணுவ வீரர்களுக்கான தாரக மந்திரம். எனவே இதனை உணர்ந்து, ராணுவத்தில் சேர்வதற்கு விருப்பம் இருந்தால் மட்டும் அதில் இணையுங்கள்” என்றும் டிக்டாக் வீடியோவில் அவர் கூறியிருந்தார்.

‘தகவல்’ என்ற தலைப்பில் ரமேஷ் மற்றொரு வீடியோவை டிக்டாக்கில் பதிவிட்டிருந்தார். “ராணுவப் பணியில் இங்கு நிறைய சவால்களை சந்திக்க வேண்டி உள்ளது. நிலைமை எதிர்பார்த்தது போல் இல்லை. ஏனெனில் ரஷ்யா மோதுவது உக்ரேன் உடன் என்பதால், இதை வாழ்வின் மிகவும் கடினமான தருணம் என்று எண்ணுகிறேன்,” என அந்த வீடியோவில் ரமேஷ் உருக்கமாக கூறியிருந்தார்.

அவரை கடைசியாக தொடர்பு கொண்டபோது, தான் பயிற்சிக்காக பெலாரஸுக்கு அழைத்து செல்லப்படுவதால், உரையாடுவதற்கு போதிய நேரம் இல்லை என்று ரமேஷ் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அவரை



தொடர்பு கொள்ள முடியவில்லை.

ரமேஷ் மட்டுமல்ல. அவரை போன்று நிறைய இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்துள்ளனர் என்ற தகவல் ஒரு வார கால கள ஆய்வில் தெரிய வந்தது.

நேபாள அரசின் 2017 -18 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, அந்நாட்டில் வேலை இல்லாதோர் விகிதம் 11.4 சதவீதமாக இருந்தது.

**சட்டவிரோதம் என்று அறியாத நேபாள இளைஞர்**

இதனிடையே, ராஜ் என்ற நேபாளத்தை சேர்ந்த இளைஞரும், ரமேஷை போல உயர் கல்வி பயில்வதற்காக ரஷ்யாவுக்கு சென்றிருந்தார் என்று தெரிய வந்தது. அங்கு அவர் இருந்தபோது தான், வெளிநாட்டைச் சேர்ந்தவர்களை ராணுவத்தில் சேர்ப்பது குறித்த அறிவிப்பை ரஷ்ய அரசு வெளியிட்டது.

அந்த அறிவிப்பு வெளியான உடனே, நேபாளத்தில் இருந்து பலர் ராஜை தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். அவர்களுக்கு ரஷ்ய மொழி அவ்வளவு சரளமாக தெரியவில்லை என்பதால், அந்நாட்டு ராணுவத்தில் சேர்வதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு அவர்கள் ராஜின் உதவியை நாடினர்.

‘எனக்கு அறிமுகமான சில நேபாளிகளுக்கு, அவர்கள் ரஷ்ய ராணுவத்தில் சேர்வதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய உதவி புரிந்துள்ளேன். அதன் பின்னர் அவர்களே, இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய உதவி தேவைப்பட்டால் என்னை தொடர்பு கொள்ளும்படி பலரிடம் எனது தொலைபேசி எண்ணை பகிர்ந்தனர்” என்று ராஜ் கூறினார்.

ரஷ்யாவில் உயர் கல்வி பயில விரும்பும் நேபாளத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதை ராஜ் வழக்கமாக கொண்டிருந்தார். அதன்பின் நேபாள மாணவர்களுடன், ரஷ்ய ராணுவத்தில் சேர விரும்பிய அந்நாட்டின் முன்னாள் ராணுவ வீரர்களும் ராஜின் உதவியை நாடினர்.

**முத்தரப்பு ஒப்பந்தம்**

“நேபாள இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் இணைவது நாட்டின் கொள்கைக்கு இணக்கமானது அல்ல,” என்று நேபாள வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் சேவா லாம்சல் வருத்தத்துடன் தெரிவித்திருந்தார்.

நேபாள குடிமக்கள் வெளிநாடுகளின் ராணுவத்தில் சேர்வது தொடர்பாக, 1947 இல் நேபாளம், இந்தியா மற்றும் பிரிட்டன் இடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. நேபாள மக்கள் இந்தியா மற்றும் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று அந்த ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா மற்றும் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்க்கப்படும் நேபாளிகள் “கூலிப்படைகளாக கருதப்படமாட்டார்கள்” என்றும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் பிரிட்டனை தவிர, பிற நாடுகளின் ராணுவத்தில் நேபாளிகள் சேர்வதை ஆதரிக்கும் கொள்கை இல்லை என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக, மாஸ்கோவில் உள்ள நேபாள தூதர் மிலன்ராஜ் துலாதரை தொடர்பு கொண்டது.

“சுற்றுலா விசாவிலும், மேற்படிப்பு பயிலவும் ரஷ்யாவுக்கு வருகை தரும் நேபாள நாட்டினர், இங்கு வேறு எந்த பணியிலும் சேர முடியாது. தங்களின் குடிமக்கள் இந்தியா மற்றும் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்வது தொடர்பாக மட்டுமே அந்த நாடுகளுடன் நேபாள அரசு ஒப்பந்தம் புரிந்துள்ளது. இதுபோன்ற ஒப்பந்தம் ரஷ்ய அரசுடன் மேற்கொள்ளப்படவில்லை” என்று கூறினார் மிலன்ராஜ்.

நேபாள இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் இணைந்துள்ளது தொடர்பான டிக்டாக் வீடியோக்களை தம்மால் ஆய்வு செய்ய முடியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

**ஆவணப்படங்கள் ஆய்வு**

இருப்பினும், ரஷ்ய ராணுவ பயிற்சி முகாம்களில் படமாக்கப்பட்ட இதுபோன்ற சில வீடியோக்களை சரிபாக்கும் பணியை பிபிசி மேற்கொண்டது.

ரஷ்ய ராணுவம் தொடர்பான ஆவணப்படங்களை கொண்ட வீடியோக்கள் பதிவிடப்பட்ட குறைந்தபட்சம் இரண்டு டிக்டாக் கணக்குகளை செய்தியாளர் ஆன்ட்ரி கோசென்கோ சரிபார்த்தார்.

‘ரமேஷ் உள்ளிட்ட இரண்டு நேபாள இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் இருப்பதை அந்த வீடியோக்கள் மூலம் அறிய முடிந்தது” என்று கூறினார் கோசென்கோ.

சம்பந்தப்பட்ட நபர்கள் ராணுவத்தில் வகிக்கும் நிலை, அவர்களின் முழு பெயர், உயரதிகாரிகளின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் ஆவணப்படங்களில் இடம்பெற்றிருந்தன. அத்துடன் ராணுவத்தில் அவர்கள் பணிபுரியும் பிரிவுகள் குறித்த தகவல்களும் அவற்றில் இடம்பெற்றுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம், காத்மாண்டுவில் உள்ள ரஷ்யாவுக்கான தூதரை மின்னஞ்சலில் தொடர்பு கொண்டது. இருப்பினும். இந்த கட்டுரை வெளியிடப்படும் வரை ரஷ்ய அதிகாரிகள் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

**நேபாள இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் சேர என்ன காரணம்?**

படித்த இளைஞர்களுக்கு நேபாளத்தில் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்காததால் தான் அவர்கள் வெளிநாடுகளின் ராணுவத்தில் சேர வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

“சுற்றுலா, மேற்படிப்பு போன்ற காரணங்களை சொல்லி நேபாளிகள் வெளிநாடுகளுக்கு பயணித்தாலும், அங்கு வேலை தேடி கொள்வதே அவர்களது பயணத்தின் பிரதான நோக்கமாக உள்ளது” என்று கூறுகிறார் திரிபுவன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியலாளரான திகாரம் கௌதம்.

“ரஷ்ய ராணுவத்தில் சேரும் நேபாள இளைஞர்கள் சில மாதங்களில் சம்பாதிக்கும் பணத்தை, பிற வழிகளில் சம்பாதிக்க அவர்களுக்கு சில ஆண்டுகள் ஆகும். இதன் காரணமாக அவர்கள் ரஷ்ய ராணுவத்தால் ஈர்க்கப்பட்டிருக்கலாம்” என்றும் அவர் கூறினார்.

ரஷ்யா - உக்ரேன் போர் தொடங்கியதில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக மொத்தம் 1,729 நேபாளிகள் ரஷ்யாவுக்கு பயணித்துள்ளனர் என்று நேபாள அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

749 நேபாள மாணவர்கள் மேற்படிப்புக்காகவும், 356 பேர் வேலைக்காகவும் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று நேபாள அரசின் குடியேற்ற துறை தெரி வித்துள்ளது.

ராஜ் உள்ளிட்ட ரஷ்யாவில் இருக்கும் நேபாளிகளிடம் பேசியபோது, ரஷ்யா வந்ததற்காக அவர்கள் கூறிய காரணங்கள், சமூகவியலாளர் கௌதமின் கருத்தை பிரதி பலிப்பவையாக இருந்தன.

“பணம் சம்பாதிப்பதற்காக தான் நாங்கள் ரஷ்யாவுக்கு வந்தோம்” என்று நேபாள இளைஞர் ஒருவர் பகிரங்கமாக தெரிவித்தார். இதன் காரணமாக தான் ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்ததாகவும். அதுகுறித்து டிக் டாக்கில் வீடியோ வெளியிட்டதாகவும் அவர் கூறினார்.

“ரஷ்யாவில் நாங்கள் சம்பாதிக்கும் பணத்தை நேபாளத்திலோ, வேறு எந்த நாட்டிலோ எங்களால் சம்பாதிக்க முடியாது. எனவே இதயம் சம்பந்தமான நோய்கள் இல்லாதவர்கள் தாராளமாக ரஷ்யாவுக்கு வரலாம்” எனவும் அந்த இளைஞர் தெரிவித்தார்.

“எங்கள் வாழ்வு மீதான அன்பின் காரணமாக நாங்கள் நேபாளத்திற்கு திரும்பலாம். ஆனால் அங்கு எங்களின் வேலைக்கு என்ன உத்தரவாதம் உள்ளது?” என்று மற்றொரு இளைஞர் கேள்வி எழுப்புகிறார்.

உக்ரேன் போரில் பங்கேற்றுள்ள ராணுவ வீரர்களுக்கு அதிக ஊதியம் தருவதாக ரஷ்ய அரசு உறுதியளித்துள்ளதாக கூறினார் ராஜ். அதன்படி, ராணுவ பயிற்சி காலத்தில் 60 ஆயிரம் நேபாள கரன்சிக்கு இணையான ஊதியம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

பயிற்சி காலம் முடிந்ததும், தங்களுக்கு மாதாந்திர ஊதியமாக 1.95 லட்சம் ரூபிள்கள் வழங்கப்படும் என்று வேலைக்கான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ரஷ்ய ராணுவத்தில் பயிற்சி மேற்கொண்டு வரும் மற்றொரு நேபாள இளைஞர் தெரிவித்தார்.

இந்த தொகை மூன்று லட்சம் நேபாள கரன்சிகளுக்கு இணையானது என்கிறார் ராஜ். அத்துடன் ஓராண்டு ஒப்பந்தம் முடிந்த பிறகு, ராணுவ வீரர்கள் ரஷ்ய நாட்டின் பாஸ்போர்ட்டை பெற இயலும். அத்துடன் அவர்கள் தங்களின் குடும்ப உறுப்பினர்களை ரஷ்யாவுக்கு அழைத்து வர முடியும் என்றும் கூறுகிறார் நேபாள இளைஞரான ராஜ்.

# இலங்கையில் 20இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள்: முறையாக விசாரணை நடைபெறவில்லை என குற்றச்சாட்டு



இலங்கையில் கடந்த 30வருட காலமாக அடையாளம் காணப்பட்ட சுமார் 20 மனிதப் புதைக் குழிகள் தொடர்பிலான விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் கூட்டாக தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது, பாரிய மனிதப் புதைக்குழி கள் அடையாளம் காணப்பட்டிருந்ததாக அந்த கூட்டறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைக்குழிகளில் இன்னும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் புதையுண்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த புதைக்குழிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்கள், தனது கடமையை சரிவர முன்னெ டுக்கவில்லை என கூறப்பட்டுள்ளது.

"உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது.




குடும்பங்களின் வழக்கறிஞர்கள் புதைக்குழிகள் உள்ள இடங்களுக்கு போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை.

யாரேனும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டிருந்த ஒரு சில அரிதான வழக்குகளிலும் அந்த குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது." என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழி**

யாழ்ப்பாணம் பகுதியில் மட்டும் துரையப்பா விளை யாட்டு அரங்கம், செம்மணி மனிதப் புதைக்குழி, மிருசு வில் மனிதப் புதைக்குழி என மூன்று மனிதப் புதைக்குழி இடங்கள் காணப்படுகின்றன.

அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைக்குழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைக்குழி




(முல்லைத் தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைக்குழி (மன்னார்) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மனிதப் புதைக்குழிகள் இருக்கின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகள் தவிர., குருநாகல், கம்பஹா, கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் இந்த மனிதப் புதைக்குழிகள் காணப்படுகின்றன.

**இந்த புதைக்குழிகள் எந்த காலப் பகுதிகளைச் சேர்ந்தது?**

இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தம் மற்றும் வன்முறைகளின் போது பலர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களே இந்த புதைக்குழிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது.

1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் சடலங்களை கொண்ட பாரிய மனிதப் புதைக்குழிகள் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டா லும், நூற்றுக்கணக்கிலாவது இலங்கையில் காணப்படு கின்றது என அந்த அறிக்கையில் கூறப்படுகின்றது.

இவ்வாறான மனிதப் புதைக்குழிகளில் 20 புதைக்குழி களில் மாத்திரமே அகழ்வுப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன.

1983 - 2009ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதலின் போது, பாதுகாப்பு படையினரால் திட்டமிட் டும், பரந்தளவிலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள் ளப்பட்ட மனிதப் புதைக்குழிகளின் அகழ்வுப் பணிகள் வெளிகொண்டு வருகின்றன என அதில் கூறப்படுகின்றது.

அதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியிலுள்ளதை போன்று ஏனைய பாரிய மனிதப் புதைக்குழிகள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட மக்களின் இன்னமும் அகழ்ந்தெடுக்கப்பட





வேண் டிய எலும்புக் கூடுகளின் எச்சங்களைக் கொண்டுள்ளதா கவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையால் ஒரு சில மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், காணாமல் போனதற்கு பொறுப்பானவர்களில் சிலர் மாத்திரமே நீதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

"மனிதப் புதைகுழிகள் தொடர்பில், மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுவதை பணிக்குழு கருத்தில் கொள்கின்றது.

எனினும், மாத்தளை புதைக்குழி மீதான மீள் விசாரணை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், ஏனைய சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள இடங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டவில்லை என்பது தொடர்பிலும், சில புதைகுழிகள் அமைந்துள்ள இடங்களில் நடைபெற்ற கட்டடப் பணிகளின்போதும், இதர நடவடிக்கைகளின் போதும் கண்டெடுக்கப்பட்ட மிகமுக்கியமான ஆதாரங் கள் பற்றி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று வெளிவந்த தகவல்கள் தொடர்பிலும் கவலைய டைந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட சிலரது இருப்பிடங்களை அறிந்து கொள்வதற்கு இவை முக்கியமான திறவுகோலாக இருக்கலாம் என்பதால், புதைகுழிகள் இருப்பதற்குச் சாத்தியமான இடங்களைக் கண்டறிவது பற்றிய முயற்சி களைத் தீவிரப்படுத்தும்படி இப்பணிக்குழு அழைப்பு விடுக்கின்றது.

இதுவிடயத்தில், சாத்தியமான இதர புதைகுழிகளின் அமைவிடங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு அது பற்றி திறன்கொண்ட சிறப்பு அணியொன்றை உருவாக்க வேண்டும் என்றும், தடயவியல் திறன்களை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் தனது பரிந்துரையினை வலியுறுத்துகின்றது." என இந்த அறிக்கையை வெளியிட் டுள்ள குறித்த நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்க ளும் கூறியுள்ளன.

**கோப்புக்களை அழிக்குமாறு உத்தரவு**

"அரசியல் தலையீட்டின் பிரதான உதாரணமாக, (1989 ஜூலை முதல் 1990 ஜனவரி வரை மாத்தளை மாவட்டத்தின் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக வும் பின்னர் இலங்கையின் ஜனாதிபதியாகவும் இருந்த) அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோட்டாபய ராஜபக்ஸ மாத்தளையில் நடந்த அகழ்வுப் பணிகளில் கொண்டிருந்த தலையீட்டை குறிப்பிடலாம்."

'மாத்தளை மாவட்டம் உள்ளடங்கும் மத்திய மாகாணத்தின் அனைத்து காவல் நிலையங்களிலும் இருந்த, ஐந்து வருடத்திற்கு முந்தைய சகல பதிவுகளையும் கோப் புக்களையும் அழித்து விடும்படி உத்தரவிட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டுகின்றது." எனவும் அந்த அறிக்கையில் ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விசாரணை ஆணைக்குழுகள்**

இந்த சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்காக அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மனித புதைக்குழிகள் அகழப்பட்ட போதிலும், அந்த அகழ்வுகளின் ஊடாக இந்த புதைக்குழிகளுக்கு காரணமானவர்கள் எவரும் நீதிக்கு முன் கொண்டு வரப்படவில்லை என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் 20இற்கும் மேற்பட்ட...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

'மூன்று 'மண்டல" ஆணைக்குழுக்களிலும் 27,526 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், இவற்றில் அவர்களுக்கு கிடைத்த நேரத்தில் ஆய்வுசெய்தவற்றில் 16,742 முறைப்பாடுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதுடன் தொடர்புடையவை என்று தீர்மானித்தன.

85 எஞ்சிய முறைப்பாடுகள் மீது விசாரணைகளை மேற்கொண்ட அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு காணாமல் போனதுடன் தொடர்புடைய மேலும் 10,136 முறைப்பாடுகளைப் பதிவுசெய்தது.

86 வேறுவிதத்தில் சொல்வதாக இருந்தால், ஏறத்தாழ 27,000 காணாமல்போதல் சம்பவங்களை 1990களின் இறுதியில் இவ்ஆணைக்குழுக்கள் உறுதிப்படுத்தியிருந் தன.

மேலே கூறியது போன்று, அதற்குப் பின்னர் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள், அதுவும் குறிப்பாக பாதுகாப்புப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போரில், காணாமல் போயுள்ளனர்." என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'கணக்காய்வு ஆண்டின் முடிவில் காணாமல் போன ஆட்கள் தொடர்பில் 39,473 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற போதிலும், இன்றுவரை வெறும் 67 இடைக்கால அறிக்கைகளே வெளியிடப்பட்டதை அவதானிக்க முடி கின்றது.

கிடைக்கப்பட்ட இவ்வாறான முறைப்பாடுகளில், 21,171 முறைப்பாடுகள் மட்டுமே கோப்புக்களில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், 702 குடும்பங்கள் மட்டுமே விசாரணைச் செயற்பாடுகளுக்காக அழைக்கப்பட்டுள்ளன.

இது மொத்தமாகப் பராமரிக்கப்பட்டுவரும் கோப்புக்களில் ஒப்பீட்டளவில் வெறும் 3.32 வீதத்திற்கும் குறைந்த முன்னேற்றத்தையே எட்டியுள்ளது." என கூறப்படுகின்றது.

**சடலங்கள் அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை**

யாழ்ப்பாணத்தின் மிருசுவில் பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சடலங்களை தவிர, வேறு எந்தவொரு உடலும் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என அந்த ஆய்வுகளை நடத்திய குழுவினர் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் - செம்மணியில் ஆடைகளை வைத்து, அடையாளம் காணப்பட்ட இரண்டு உடல்கள் கூட, அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்டு, அடையாளம் காணப்படுகின்ற உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனைப் பணிக்குழு வலியுறுத்தியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார், வயது முதிர்வு அல்லது உடல்நலம் குன்றி தொடர்ச்சியாக மரணடைந்து வருவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் மன்னார் மாவட்ட தலைவர் மனுவேல் உதயச்சந்திராவை மேற்கோள்காட்டி அந்த அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று வரை 178 தாய்மார் உயிரிழந்துள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"இவ்வாறாக இக்குற்றச் செயல்களில் வாழும் சாட்சிகள் எங்கள் மத்தியிலிருந்து படிப்படியாக மறைந்து கொண்டு வருகின்றன. நாமும் இறந்து போனால் ஆதாரங்கள் அழிக்கப்பட்டுவிடும்.

நீதி எப்போது கிடைக்கும் என தெரியாமல், வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் நாங்கள் ஈடுபட்டு நீதிக்காக போராடி வருகின்றோம்" என மனுவேல் உதயச்சந்திரா கூறியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு அமைச்சரின் பதில்**

நான்கு அமைப்புக்களினால் தயாரிக்கப்பட்ட இந்த கூட்டறிக்கையை தாம் முழுமையாக நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான கேணல் நலின் ஹேரத், இதனைக் குறிப்பிட்டார்.

"நாம் இதனை நிராகரிக்கின்றோம். மிகவும் தெளிவாக கூறுகின்றோம். பாதுகாப்பு அமைச்சு இதனை நிராகரிக்கின்றது" என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான கேணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், வழக்குகளின் தரவுகள் உள்ளிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ தெரிவித்தார்.

'1994ம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகள் மற்றும் தேடிக் கொள்ளக்கூடியதாக இருந்த வழக்கு விசாரணை அறிக்கைகள், சம்பந்தப்பட்டவர்க ளின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் மற்றும் அந்தந்த பிரதேசங்களில் வாழும் காணாமல் ஆக்கப்பட் டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக் கப்பட்டுள்ளது." என காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ தெரிவித்தார்.

இந்த சம்பவங்கள் தொடர்பிலான உண்மையை வெளிகொணர்வதன் ஊடாக, அரசாங்கம் இதிலிருந்து விடுப்பட முடியும் என பிரிட்டோ பெர்ணான்டோ குறிப்பிடுகின்றார்.

ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டதாக ஆணைக்குழு அறிக்கைகளில் கூறப்பட்டுள்ள நிலையில், கோட்டாபய ராஜபக்ஸவின் காலத்தில் மாத்திரம் சுமார் 700 பேர் வரை காணாமல் போயுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த தகவல்களை தாம் கூறவில்லை என தெரிவித்த அவர், இது ஆணைக்குழுக்களின் அறிக்கைகளிலேயே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு பதிலளிப்பதே அரசாங்கத்தின் பொறுப்பு என காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ தெரிவித்தார்.






# துணைவேந்தர் பதவியிலிருந்து என்னை அகற்ற மிலேச்சத்தனமான விமர்சனங்கள்

## எதற்கும் அஞ்சேன் என்கிறார் கிழக்கு துணைவேந்தர்

நிந்தவூர், ஜூன் 30

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்காக காழ்ப்புணர்ச்சி கொண்ட சமூக விரோதிகள் என்மீதும், பல்கலைக்கழகம் மீதும் மிலேச்சத்தனமான குற்றச்சாட்டுக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் நான் ஒருபோதும் அஞ்சமாட்டேன்”**



-இவ்வாறு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

நேற்று மாலை தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாக மண்டபத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் கூட இவ்வாறு சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து உண்மை நிலை அறியாது அபாண்டமாகக் கருத்து வெளியிட்டமை தொடர்பில் கவலையும், விசனமும் வெளியிட்டார்.

அண்மைக்காலமாக சில காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களால் சமூக வலைத்தளங்களிலும், பொது வெளிகளிலும் தமக்கெதிராகவும், பல்கலைக்கழகத்திற்கு மாசு கற்பிக்கப்படும் வகையிலும் விஷமத்தனமாக வெளியிடப்படும் குற்றச்சாட்டுகளுக்கும், விமர்சனங்களுக்கும் விளக்கமளிக்கும் வகையில் துணைவேந்தரால் இந்த ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

துணைவேந்தர் போராசிரியல் ரமீஸ் அபூபக்கர் தொடர்ந்து விளக்கமளிக்கையில் பின்வருமாறு கூறினார்.

“தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவனாக நுழைந்து இங்கேயே விரிவுரையாளராகவும் இருந்து, உப வேந்தர் பதவியும் பெற்று இன்று வரை இப்பல்கலைக்கழகத்தின் இருப்புடன் இணைந்து, ஈர்ப்பு அதிகம் கொண்டவனாக இருந்து வருகின்றேன்.

நான் இளைப்பாறும் வரை கௌரவமாகவும் இப்பல்கலைக்கழகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவததையே இலட்சியமாகக் கொண்டுள்ளேன்.

இந்தப் போலிவேடதாரிகளின் நாசகார நடவடிக்கைகளுக்காக என்னை நம்பியுள்ள இந்த உயர் நிறுவனத்தைக் கைவிடவும் நான் தயாரில்லை.

இப்பல்கலைக்கழகமும், பல்கலைக்கழக நிர்வாகமும், வினைத்திறனாக செயல்படுவதைப் பொறுக்க முடியாதவர்களே இன்று சோடிக்கப்பட்ட விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் சமூக வலைத்தளங்களில் கூடுதலாக முன்வைத்து வருகின்றனர்.

கடந்த இருவருடகாலமாக இத்தகைய சமூக விரோதிகளின் செயற்பாடுகளையிட்டு நான் பொறுமைகாத்து வந்த போதிலும், இனியும் உண்மைத் தன்மைகளைத் தெளிவுபடுத்தாமலிருக்க முடியாது.

எனினும், எனக்கு மானபங்கம் ஏற்படுத்தும் வகையில் தொடரும் இத்தகைய விசமத்தனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் நான் கவனம் கொண்டுள்ளேன்.

சட்ட ரீதியாக எதனையும் எதிர்கொள்ள முடியாத, முகவர்களூடாகவும் இவ்வாறு கீழ்த்தரமான செயல்பாடுகளை முன்னெடுப்போருக்கு தக்க பாடத்தைப் புகட்ட வேண்டும்.

எனது செயல்பாடுகளில் குறிப்பாக கல்விசார் நேர்மைத் தன்மை போலிகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்யும்.

என்னையும், பல்கலைக்கழகத்தையும் பதற்ற நிலையில் வைத்திருக்க வேண்டுமென சிலர் நினைப்பது பகற்கனவாகவே முடியும்”-என்றார்.

(அ-06)

# மூவருக்கு கௌரவம்



நிந்தவூர், ஜூன் 30

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது வெள்ளி விழா வருட 2023 / 2024 புதிய நிருவாகிகளின் பதவியேற்பு விழாவில் மூவருக்கு அவர்களது சேவைகளைப்பாராட்டி கழகத்தால் கௌரவம் அளிக்கப்பட்டது.

கல்முனை கிறீன் பார்க்றிசோட் மண்டபத்தில் நடைபெற்ற இப் பெருவிழாவில், கல்முனை நகரலயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், மூத்த உறுப்பினருமான, கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி. எம்.கோபாலரெட்ணம், கிழக்கின் சிரேஸ்ட ஊடகவியலாளர்களான கலாபூசணம் ஏ.எல்.எம்.சலீம், ஊடகர் செல்லையா பேரின்பராசா ஆகியோரே பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

விசேடமாக இடம் பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வின் போது, விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட லயன்ஸ் மாவட்ட தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன கௌரவிக்கப்பட்ட மூவருக்கும் பொன்னாடை போர்த்தியதுடன், கழகத்தின் புதிய தலைவர் பொறியியலாளர் எம்.சுதர்சன், செயலாளர் லயன் ஏ.எலம்.எம்.பாயிஸ், பொருளாளர் லயன். எம்.பரமேஸ்வரநாதன் ஆகியோர் மாலைகள் அணிவித்தும் கௌரவமளித்தனர்.

கௌரவிக்கப்பட்ட மூவருக்கும் விழாவில் கலந்து கொண்ட கழக முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் வாழ்த்தினையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

(அ-06)

# கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு

நிந்தவூர், ஜூன் 30

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது வெள்ளி விழா வருட (2023 /20 24) புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கல்முனை கீறீன் பார்க்றிசோட் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விமரிசையான பதவியேற்பு விழாவில், லயன்ஸ் மாவட்ட, தெரவு செய்யப்பட்டுள்ள இரண்டாவது உதவிமாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விழாவிற்கு வருகை தந்த பிரதம அதிதி உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன மற்றும் லயன் மாவட்ட முக்கியஸ்த்தர்கள் கழகத் தலைவர் பொறியலாளர் எம்.சுதர்சன் மற்றும் உறுப்பினர்களால் சிறப்பாக வரவேற்கப்பட்டனர்.

இதேவேளை, கழகத்தின் புதிய நடப்பாண்டுக்கான (2023 / 2024) தலைவராகத் தெரிவு செய்ப்பட்டுள்ள லயன், பொறியியலாளர் எம்.சுதர்சன், செயலாளர் லயன் ஏ.எல்.எம்.பாயிஸ், பொருளாளர் லயன், எம். பரமேஸ்வரநாதன் ஆகியோர் உட்பட தெரிவு செய்யப்பட்டுள்ள கழகத்தின் புதிய நிருவாகிகளுக்கு, பிரதம அதிதி இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



அத்துடன் கழகத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும், புதிய நிருவாகிகளின் கடமைப்பொறுப்புக்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

மேலும் கடந்த 25 வருடகாலமாக அளப்பரிய சேவைகளாற்றிவரும் மூத்த கழகமான கல்முனை நகர லயன்ஸ் கழகத்திற்கு பெரும் பாராட்டைத் தெரிவித்த அவர்,

எதிர்காலத்தில் கழக உறுப்பினர்களாக புதியவர்களையும், குறிப்பாக இளைஞர்களையும் இணைத்துக்கொள்வதுடன், சிறந்த செயற்திட்டங்களை வகுத்து செயற்பட முன்வருமாறும் கேட்டுக்கொண்டார்.

(அ-06)

# களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தீர்த்த உற்சவம்



மட்டக்களப்பு, ஜூன் 30

இலங்கையின் தானாக தோன்றி மூலமூர்த்தியை கொண் டுள்ள ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று முன் தினம் காலை ஆயிரக்கணக்னோர் புடை சூழ இடம்பெற்றது.

இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 10 தினங்களும் சிறப்பாக இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வி.கு.சிறீஸ் கந்தராஜா குருக்களின் தலைமையில் இடம்பெற்ற உற்சவத்தில் ஆலயத்தில் மாம்பழத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றதுடன் நேற்று முன்தினம் காலை விநாயகவழிபாடுகளுடன் திருப்பொற்சுண்ணம் இடிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி தீர்த்தக்கேணிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறப்பு பூசைகள் செய்யப்பட்டு தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

இத் தீர்த்த உற்சவத்தில் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (அ)



# டைட்டான் நீர்மூழ்கி சிதைவுகளிடையே மனித எச்சம் மீட்பு!

## நிபுணர்கள் ஆச்சரியம்

**நியூயோர்க், ஜூன் 30**

**வட அத்திலாந்திக் கடலில்-கனடாவுக்கு அருகே - ஆழ் கடலில் அமுங்கி வெடித்துச் சிதறிய ‘டைட்டான்’ என்ற சிறிய நீர்மூழ்கிக் கப்பலின் சிதைந்த பல பாகங்கள் மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்படுகின்றன.**

ஆச்சரியமளிக்கும் விதமாக - கடலில் பத்தாயிரம் அடிகள் ஆழத்தில்- கப்பலின் சிதைவுகளிடையே இருந்து மனித உடல் எச்சம் என நம்பப்படுகின்ற துண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டி ருக்கின்றன. அமெரிக்கக் கரையோரக் காவல் படையினர் நேற்றுப் புதன் கிழமை இத்தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

சந்தேகிக்கப்படும் உடற்பாகங்கள் பகுப்பாய்வு செய்வதற்காக அமெரிக்கத் துறை முகம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மிக வேகமான சமுத்திர நீரோட்டம் மிகுந்த அடியில் கலத்துடன் வெடித்துச் சிதறிய ஐந்து பேரின் உடல்களையும் கண்டுபிடிப்பது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை என்று நிபுணர்கள் முதலில் கணிப்பிட்டிருந்தனர். அந்த நிலையில் மனித உடற் பாகங்கள் என நம்பப்படுகின்ற பகுதிகள் மீட்கப்பட்டிருப்பது பெரும் ஆச்சரியமளித்துள்ளது.

அத்திலாந்திக் கடலின் ஆழத்தில் நூற்றாண்டுக்கும் மேலாகக் கிடக்கின்ற புகழ்பெற்ற “டைட்டானிக்” கப்பலின் சிதைவுகளைப் பார்ப்பதற்காக சென்ற உல்லாசப் பயணிகள் மூவர் உட்பட ஐவர் பயணம் செய்த நீர்மூழ்கி கடந்த 18 ஆம் திகதி வெளியுலகத் தொடர்பை இழந்து காணாமற் போனமை தெரிந்ததே. இங்கிலாந்து கோடீஸ்வரர் ஹாமீஸ் ஹாடிங் மற்றும் பாகிஸ்தான் செல்வந்தர் ஷாஜதா தாவூத் அவரது மகனான சுலேமான், பிரான்ஸ் பிரஜையாகிய ஆழ்கடல் சுழியோடியும் கடல்சார் தொல்லியல் ஆய்வு நிபுணருமாகிய 77 வயதான போல்-ஹென்றி நர்ஜோலெ மற்றும் நீர்மூழ்கிக் கப்பலுக்குச் சொந்தமான “ஓசியன்கேற் எக்ஸ்பெடிசன்ஸ்” நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி ஸ்ரொக்டொான் றுஷ் ஆகிய ஐவருமே நீர்மூழ்கியுடன் வெடித்துச் சிதறி உயிரிழந்தவர்களாவர்.

தாய்க் கப்பலில் இருந்து புறப்பட்ட 90 நிமிட நேரத்தில் மர்மமான முறையில் ஆழ்கடலில் உள் அமுக்க வெடிப்பு ஏற்பட்டுச் சிதறியதாக நம்பப்படுகின்ற அதன் முக்கிய சில பாகங்களைக் கரையோரக் காவல் படை நிபுணர்கள் கடந்த சில நாட்களாக மீட்டெடுத்து வருகின்றனர்.

நீர்மூழ்கிக் கலத்துக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறியும் விசாரணைகளுக்கு அதன் பாகங்கள் மற்றும் மனித எச்சங்கள் உதவக் கூடும் என்று நம்பப்படுகிறது. (அ)

# பொலிஸ் சுட்டு இளைஞன் பலி!

## பாரிஸ் புறநகரெங்கும் வன்முறைகள் குடும்பத்துக்கு அரசு அனுதாபம் தெரிவிப்பு

*பாரிஸ், ஜூன் 30*

பாரிஸ் நகருக்கு மேற்கில் - நொந்தேர் என்ற இடத்தில் நேற்று முன் தினம் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்துப் பாரி ஸின் புற நகரங்களில் பொலிஸாருக்கு எதிராக வன்செயல்கள் வெடித்துள்ளன. தெருக்களில் நேற்று இரவு முழுவதும் நீடித்த வன்முறை மற்றும் தீ வைப்புச் சம்பவங்கள் இரண்டாவது இர வாக இன்றும் நீடிக்கின்ற ஆபத்து நிலைமை காணப்படுகி றது. பொலிஸார் முழு உஷார் நிலையில் உள்ளனர்.

வன்செயல்களைத் தடுப்பதற்காக சுமார் இரண்டாயிரம் பொலிஸார் புற நகரங்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

எம். நாஹெல் என்ற 17 வயதான இளைஞரே சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அவர் அல்ஜீரியாவைப் பூர்வீகமாகக் கொண்ட குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். சமைத்த உணவு விநியோகிக்கின்ற தொழிலில் ஈடுபட்டுவந்த அந்த இளைஞனின் மரணம் நாடெங்கும் பலத்த உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. ஆத்திரமுற்ற இளைஞர் குழுக்கள் நொந்தேர் நகரத்திலும் அண்டியுள்ள

புற நகரங்களிலும் நேற்றிரவு முழுவதும் பொலிஸாரோடு மோதல்களில் ஈடுபட்டனர். கார்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் தீக்கிரையாகின.

புற நகரங்களில் பொலிஸாரை நோக்கி எரிகுண்டுகள் மற்றும் வாண வெடிகளை ஏவித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. பாரிஸுக்கு வெளியே துலூஸ் லீல் போன்ற நாட்டின் முக்கிய நகரங்களிலும் பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

பலியான இளைஞர் போக்குவரத்துப் பொலிஸார் வழிமறித்த சமயம் அதனைக் கணக்கில் எடுக்காமல் தனது காரை வேகமாகச் செலுத்திச் சென்றுள்ளார் என்றும் - காரைத் துரத்திச் சென்று வழி மறித்து நிறுத்திய பின்னரே மிக நெருக்கமாக வைத்துச் சுடப்பட்டுள்ளார் என்றும் - கூறப்படுகிறது.

சமூக ஊடகங்களில் பரவிய ஒரு காணொலியில், பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் இளைஞரை நோக்கித் துப்பாக்கியை நீட்டுகின்ற காட்சி இடம்பெற்றுள்ளது. சிறிது நேரத்தில் வேட்டுச் சத்தம் கேட்கிறது.

சாரதி நெஞ்சில் சுடப்பட்ட நிலையில் கார் தொடர்ந்தும் வேகமாகச் செலுத்திச் செல்லப்பட்டு வழியில் மோதி நின்றுள்ளது. அவசர மீட்புப் பணியினர் சூட்டுக் காயத்துடன் இளைஞரை மீட்டெடுத்து முதலுதவிச் சிகிச்சை அளித்த போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார்.

இளைஞரை மிக நெருக்கமாக நின்று சுட்டவர் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தனக்கு ஏற்படவிருந்த உயிராபத்தைத் தடுப்பதற்காவே சுட்டார் என்று அவர் கூறியிருக்கிறார்.

இளைஞர் செலுத்திச் சென்ற மஞ்சள் நிற பென்ஸ் கார் போக்குவரத்துக் குற்றச் செயல்கள் பலவற்றில் சம்பந்தப்பட்டது என்றும் அதனாலேயே அதனை நிறுத்திச் சோதனையிட முயன்றனர் என்றும் போக்குவரத்துப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞனின குடும்பத்தினரிடம் அரசு நேரில் அனுதாபம் தெரிவித்திருக்கிறது.

மார்சேய் நகரத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அரசுத் தலைவர் மக்ரோன், இளைஞர் உயிரிழந்த சூட்டுச் சம்பவம் தொடர்பாக அங்கு கருத்து வெளியிடுகையில் “மன்னிக்க முடியாதது” என்று குறிப்பிட்டிருக்கிறார். அவரது கருத்து பொலிஸ் தொழிற்சங்கங்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸாரின் நடவடிக்கை பற்றி முறைப்படி விசாரணை செய்து தீர்ப்பு வெளிவருவதற்கு முன்பாகவே அதிபர் எழுந்தமானமாகத் தீர்ப்புக் கூறும் பாணியில் அவசரப்பட்டுக் கருத்து வெளியிட்டிருக்கிறார் என்று பொலீஸ் தரப்புகளில் அதிருப்தி எழுந்துள்ளது. (அ)

# பிளேக் நோய் ஆபத்தில் மொங்கோலியா மக்கள்!




*உலன்பட்டர், ஜூன் 30*

மொங்கோலியாவில், புபோனிக் பிளேக் நோய் வேகமாக பரவி வரும் நிலையில் பாதிக்கப்பட்டவருக்கு உரிய சிகிச்சை அளிக்கா விடில் 24 மணி நேரத்திற்குள் மரணத்தை சம்பவிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த வகையில், இந்த வைரஸ் கொறித்து உண்ணும் விலங்குகளிடம் காணப்படுவதால் அந்த நாட்டில் அணில் வகையை சேர்ந்த மர்மோஸ் என்ற விலங்குகளை வேட்டையாடுவது குற்றம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும் பலர் அவற்றை சட்ட விரோதமாக வேட்டையாடி உட்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான சூழலில், அந் நாட்டில் பிளேக் நோய் அறிகுறியுடன் பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்த அடிப்படையில், அங்குள்ள 17 மாகாணங்கள் பிளேக் நோய் அபாயத்தில் உள்ளதாக நோய்களுக்கான தேசிய மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், பிளேக் நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட கோவி அல்டாய் என்ற மாகாணத்தை தனிமைப்படுத்தி அந்த நாட்டின் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)



ஈழநாடு





## டெஸ்டில் 9,000 ஓட்டங்கள் கடந்தார் ஸ்ரீவ் ஸ்மித்!

லோர்ட்ஸ், ஜுன் 30

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான ஸ்ரீவ் ஸ்மித் டெஸ்ட் கிரிக்கெட்டில் 9 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார். நடப்பு ஆஷஷ் தொடரில் லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் 32 ஓட்டங்களை எடுத்தபோது இந்த சாதனையை அவர் படைத்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிக குறைவான இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி (174 இன்னிங்ஸ்) 9 ஆயிரம் ஓட்டங்களை கடந்த துடுப்பாட்ட வீரர்களில் இரண்டாவது இடத்தில் அவர் உள்ளார். 172 இன்னிங்ஸ்களில் 9 ஆயிரம் ஓட்டங்களை கடந்து முதல் இடத்தில் உள்ளார் குமார் சங்ககார. ராகுல் டிராவிட் (176 இன்னிங்ஸ்), லாரா மற்றும் பொண்டிங் (177 இன்னிங்ஸ்) ஆகியோர் ஸ்மித்துக்கு அடுத்தடுத்த இடத்தில் உள்ளனர்.

34 வயதான ஸ்மித், கடந்த 2010இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை 99 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 9,054 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 31 சதங்கள் மற்றும் 38 அரைச் சதங்கள் அடங்கும். அதிகபட்சமாக ஒரே இன்னிங்ஸில் 239 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரின் துடுப்பாட்ட சராசரி 59.96.

டெஸ்ட் கிரிக்கெட் அதிக ஓட்டங்கள் குவித்த ஆஸி . வீரர்களின் பட்டியலில், றிக்கி பொண்டிங் - 168 போட்டிகளில் 13,378 ஓட்டங்கள், அலன் போர்டர் - 156 போட்டிகளில் 11,174 ஓட்டங்கள், ஸ்ரீவ் வோ - 168 போட்டிகளில் 10,927 ஓட்டங்கள், ஸ்ரீவ் ஸ்மித் - 99 போட்டிகளில் 9,054 ஓட்டங்கள், மைக்கல் கிளார்க் - 115 போட்டிகளில் 8,643 ஓட்டங்கள் ஆகியோர் உள்ளனர். (ஐ)

பேட்ஹம்பர்க் ரென்னிஸ்

## தோல்வியிலிருந்து தப்பினார் ஸ்வியாரெக்!



பேட்ஹம்பர்க், ஜுன் 30

பேட்ஹம்பர்க் மகளிர் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாரெக் தோல்வியின் விளிம்பில் இருந்து தப்பினார்.

ஜேர்மனியின் பேட்ஹம்பர்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஒரு பகுதியாக திங்கட்கிழமை இரவு நடைபெற்ற தொடக்க சுற்றுப் போட்டியில் போலந்தை சேர்ந்த உலகின் முதல்நிலை வீராங்கனை ஸ்வியாரெக்கும், டாட்ஜனா மரியாவும் மோதினர். இதில் முதல் செற்றை 5-7 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்வியாரெக் இழந்து அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் சுதாகரித்துக்கொண்டு ஆடிய அவர் அடுத்த இரண்டு செட்களையும் 6-2, 6-0 என எளிதாக கைப்பற்றி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

சுவிஸ் வீராங்கனை ஜில் டைச்மேன் 3-6, 6-3, 6-4 என யுஎஸ்ஏவின் கிளேயர் லியை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் ஸ்வியாரெக்குடன் மோதுகிறார் ஜில்.

# இரண்டாவது ஆஷஷ் போட்டி; ஆஸி. 339 ஓட்டங்கள் குவிப்பு

லோர்ட்ஸ், ஜுன் 30

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 2ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி நிதானமாக விளையாடி வருகிறது.

லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்ணர், உஸ்மான் கவாஜா இணை சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. நிதானமாக விளையாடிய கவாஜா 70 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோஷ் டங் பந்தில் "போல்ட்" ஆனார்.

தனது 35ஆவது அரைச்சதத்தை அடித்த டேவிட் வோர்ணர் 88 பந்துகளில் ஒரு சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோஷ் டங் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

96 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்த நிலையில் மோர்னஷ் லபுஷன், ஸ்ரீவ் ஸ்மித் இணை இன்னிங்ஸை கட்டமைத்தது. தேநீர் இடைவேளையில் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

லபுஷான் மற்றும் ஸ்மித் இணைந்து 102 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். 93 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்து லபுஷான், றொபின்சன் வேகத்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த ஹெட் மற்றும் ஸ்மித் இணைந்து 118 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர்.

ஹெட், 73 பந்துகளில் 77 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கிறீன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 83 ஓவர்களுக்கு 5 விக்கெட்களை இழந்த நிலையில் 339 ஓட்டங்கள் எடுத்துள்ளது ஆஸி. களத்தில் ஸ்மித், 149 பந்துகளை



எதிர்கொண்டு 85 ஓட்டங்களுடனும் மறுமுனையில் அலெக்ஸ் ஹேரி 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)




## உலகக் கிண்ணத் தொடர் பாக். பங்கேற்பது சந்தேகம்

புதுடில்லி, ஜுன் 30

இந்தியா - பாகிஸ்தான் உறவுகள் மோசமான சூழ்நிலையில் உள்ளதால் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி பங்கேற்குமா என கேள்வி எழுந்துள்ளது.

இரு நாடுகளும் இரு தரப்பு தொடர்களில் ஆடாத நிலையில் சர்வதேச போட்டிகளில் மட்டுமே மோதுகின்றன. இந்நிலையில் இந்தியாவில் ஆட பாகிஸ்தான் அணிக்கு அந்நாட்டு அரசு அனுமதி தருமா எனத் தெரியவில்லை. இப்போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் அகமதாபாதில் மோதும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தானுடன் நடைபெறும் போட்டிகளுக்கான இடங்களை மாற்ற வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரியுள்ளது. ஆனால், அதை சர்வதேச கிரிக்கெட் சபை நிராகரித்து விட்டது.

சென்னையில் ஆப்கானிஸ்தானுடன் நடைபெறும் போட்டியை பெங்களூருக்கும், ஆஸி.க்கு எதிராக பெங்களூரில் நடைபெறும் போட்டியை சென்னைக்கும் மாற்ற பாகிஸ்தான் கோரியிருந்தது.

இந்தியாவில் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பது சந்தேகம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ள நிலையில், பாகிஸ்தான் அணி கண்டிப்பாக வரும் என சர்வதேச கிரிக்கெட் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பங்கேற்பதற்கான ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட்டுள்ளது. ஒவ்வோர் அணியும் தங்கள் நாட்டு விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதை ஐ. சி. சி. மதிக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தேர்தலுக்கு பலுகிஸ்தான் உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், அந்நாட்டு கிரிக்கெட்டில் குழப்பம் நிலவி வருகிறது. (ஐ)

## 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய முதல் பந்துவீச்சாளராக நதன்!

லோர்ட்ஸ், ஜுன் 30

100 போட்டிகளில் தொடர்ச்சியாக விளையாடிய முதலாவது பந்துவீச்சாளர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் நதன் லயன் பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஓவல் மைதானத்தில் நடக்கிறது. இந்த போட்டியில் விளையாடுவதன் மூலம் தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரே பந்து வீச்சாளர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் நதன் லயன் படைத்துள்ளார்.

தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்தவர்கள் பட்டியலில் 5 துடுப்பாட்ட வீரர்களில் மட்டுமே இடம் பிடித்த நிலையில் 6ஆவது வீரராக நதன் லயன் பந்து வீச்சாளராக இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர்களின் பட்டியலில் அலஸ்ரெயர் குக் - 159,

அலன் போர்டர் - 153, மார்க் வோ - 107, சுனில் கவாஸ்கர் - 106, பிரண்டன் மக்கலம் - 101, நதன் லயன் - 100*.



# கலைத்த சபைகளை மீள கட்டமைப்பது மக்கள் இறையாண்மையை பாதிக்கும்!

## நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 30

**கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீள அழைக்கும் அதிகாரம், மக்களின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**



உள்ளூராட்சி மன்றங்களை மீள அழைக்கும் அதிகாரத்தை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் சட்ட மூலம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இதனை கூறினார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கே அதிகாரம் வழங்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

மக்கள் நிர்ணயித்த கால அளவைத் தாண்டி அந்தந்த பதவிகளில் செயல்பட மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டியது அமைச்சர் அல்ல, மக்களே அதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இது நாட்டின் ஜனநாயகத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார்.

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான அதிகாரத்தை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிப்பட்ட பிரேரணை, சட்ட மூலமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் திருத்தச் சட்டம் மற்றும் பிரதேச சபை சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துகளை திருத்துவதற்காக இந்த சட்டமூலம் தயாரிக்கப் பட்டுள்ளது.

அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நிர்ணயிக்கும் கால எல்லை வரை மீண்டும் ஸ்தாபிக் சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# திடீரென தரையிறக்கப்பட்ட விமானத்தினால் பரபரப்பு!

கொழும்பு, ஜூன் 30

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து, ஜப்பானின் நரிட்டா சர்வதேச விமான நிலையம் நோக்கி நேற்று முன்தினம் இரவு 8.20 மணிக்குப் புறப்பட்ட விமானமொன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமார் இரண்டரை மணிநேரத்தில் மீண்டும் இலங்கையை வந்தடைந்தது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்-455 என்ற விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானத்தில் 301 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் வேறொரு விமானத்தில் ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தினால் விமான நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# வரி அறவீட்டின்போது ஏற்படக்கூடிய பிரச்னைகளை தீர்க்க விசேட நீதிமன்று

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 30

அன்றாடம் வரி அறவீட்டின்போது ஏற்படக்கூடிய பிரச்னைகளை நிவர்த்திப்பதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பரிந்துரைகளை ஜனாதிபதியின் அனுமதிக்காக விரைவில் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய தெரிவித்தார்.

அதில் வரி அறவீடு தொடர்பிலான நடைமுறைப் பிரச்னைகளை நிவர்த்தித்தல் தொடர்பிலான விசேட பரிந்துரைகளை உள்ளடங்கியிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

நாட்டின் பொருளாதார அடிப்படையில் பார்க்கையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டியது முக்கிய விடயமாகும் என்றும் வருமான அதிகரிப்பின்போது வரி அறவீடுகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும் எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதும் வரி செலுத்தாமல் இருக்கின்ற மதுபான வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சிலவற்றுக்கு 14 தினங்களுக்கு வரிப் பணத்தை செலுத்து முடிக்குமாறு விசேட கட்டளை ஒன்று விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதும் நாட்டில் சுயமாக வரிச் செலுத்தும் முறைமை ஒன்றே காணப்படுவதாகவும் அதனை மிக விரைவாக மாற்றியமைக்க வேண்டியது அவசியமெனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

# லாப்ஸ் எரிவாயுவை தடையின்றி பெறலாம்

கொழும்பு, ஜூன் 30

சமையல் எரிவாயு விநியோகம் குறித்து லாப்ஸ் நிறுவனம் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி லாப்ஸ் சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெறும் என லாப்ஸ் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் தமக்கு அருகிலுள்ள லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் விநியோகக் கிளைக்குச் சென்று கொள்வனவு செய்யலாம் என்பதுடன் போலியான தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1345 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் லாப்ஸ் வாடிக்கையாளர் பராமரிப்பு சேவையைத் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்யலாம் எனவும் லாப்ஸ் நிறுவனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (அ)



# வவுனியாவில் ஹஜ் தொழுகை

வவுனியா, ஜூன் 30

வவுனியா தவ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ் பெருநாள் சிறப்புத் தொழுகை பட்டாணிச்சூர் 5ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஜமாத்தின் தலைவர் அஷ் ஷேய்க் ஸாதிகீனால் (பாரி) நடத்தப்பட்ட இத் தொழுகையில் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# நோயாளரை இறக்கிவிட்டுவந்த அம்புலன்ஸ் வாகனம் விபத்து!

## சாரதி படுகாயம்

கொழும்பு, ஜூன் 30

நோயாளிகளை வைத்தியசாலையில் இறக்கிவிட்டுவந்த அம்புலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார். அவரின் நிலைமை கவலைக்கிடம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தியத்தலாவை வைத்தியசாலையில் இருந்து பதுளை வைத்தியசாலைக்கு நேற்று நோயாளர்களை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வாகனம், நோயாளர்களை வைத்தியசாலையில் இறக்கிவிட்டு மீண்டும் தியத்தலாவை நோக்கி பயணிக்கையில், பதுளை-பண்டாரவளை வீதி தோவ திக்கராவ பிரதேசத்தில் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.



விபத்தில் அம்புலன்ஸ் வண்டியின் சாரதி படுகாயமடைந்தார். அவர் தற்போது தியத்தலாவை வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## இந்தியாவில்...

கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மறவன்புலவு சச்சிதானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கிலுள்ள சைவப் பகுதிகளில் பிற மதத்தவர் அடாத்தாக கட்டுகின்ற மத தலங்கள் அனைத்தும் பாபர் மசூதிகளே என்றும் மைத்திரிபால சிறிசேனாவிடம் மறவன்புலவு சச்சிதானந்தன் எடுத்துரைத்தார்.

இலங்கையிலுள்ள இந்துக்களுக்கு இந்தியாவிலுள்ள 120 கோடி இந்துக்கள் ஆதரவாக உள்ளதாகவும்

ஒவ்வொரு சிவலிங்கத்தின் மீது பிற மதத்தவர்கள் கை வைக்கும்போது காஸ்மீரில் இருந்து கதிர்காமம் வரைக்கும் உள்ள ஒவ்வொரு சைவர்களும் கண்ணீர் வடிப்பதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் பாபர் மசூதிகளை உருவாக்க வேண்டாம் என்றும் பௌத்த சமயத்துக்கு கொடுக்கும் முன்னுரிமையை விடவும் சைவ சமயத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் மறவன்புலவு சச்சிதானந்தன் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மைத்திரிபால சிறிசேன, உண்மையில் சைவர் என்றும் உலகிற்காக பௌத்தராக வாழ்வதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் கூறினார். (அ)

## சிறுவர்...

இதேசமயம், முறைப்பாடுகள் செய்யப்படாத - சம்பந்தப்பட்ட தரப்புகள் சமரசம் செய்த - மூடி மறைக்கப்பட்ட சம்பவங்கள் இதிலும் பல மடங்கு இருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பொலிஸ் நிலையப் பிரிவுகள் உள்ளன. இதில், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்கு உட்பட்ட 9 பொலிஸ் நிலைய பிரிவுகளிலேயே சிறுவர் மீதான 53 வன்முறை சம்பவங்கள் பதிவாகின. அத்துடன், பெண்களுக்கு எதிராகவும் 4 வன்முறை சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதில், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலேயே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அங்கு, 14 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் 7 முறைப்பாடுகளும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் தலா 6 முறைப்பாடுகளும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 5, மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் 4, கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் 3 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகள் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், உடல், உள ரீதியான துன்புறுத்தல்கள் - தண்டனைகள் சார்ந்தவையாகும். இவை, வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெற்றுள்ளன என்றும் அறிய வருகின்றது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு - நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிறுவர் மீதான வன்முறைகள் தொடர்பில் பெற்றோர், பாதுகாவலர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்ய வேண்டும் என்றும் சந்தேகநபர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதன் மூலமே சிறுவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என்றும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர்மீதான வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலையிலேயே அண்மையில் பாடசாலை மாணவிகளை பாதுகாக்கும் நோக்கில் பொலிஸாரின் கண்காணிப்பில் வட்ஸ் அப் குழுக்களை நிர்வகிக்க பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மைத்திரிபால...

திருமதி மாலினி அஜந்தன் மற்றும் குடும்பத்தினர் வரவேற்பு அளித்தனர்.

இதனிடையே, யாழ்ப்பாணம் வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லூர் ஆலயத்தில் வழிபாடாற்றியதுடன் யாழ். மறைமாவட்ட ஆயர், நாக விகாராதிபதி ஆகியோரையும் நேரில் சென்று சந்தித்து ஆசீ பெற்றார். தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 16இல்)

## முன்னாள்...

வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்து டன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் புத்தளம் பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## 10,255...

பிரதமர் இணங்கியுள்ளனர். தங்களின் பணிகளை நிரந்தர மாக்குமாறு நீண்ட, தற்காலிக பணியாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட நிலையில் இந்த சாதாரண பணியாளர்கள் ஆற்றிய பணியை கருத்தில் கொண்டு அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## அஸ்வெசும...

இதனிடையே, "அஸ்வெசும" நலன்புரி திட்டத்துக்கு சமமாக பொது மக்களுக்கான கொடுப்பனவு திட்டங்களான முதியோர் கொடுப்பனவு 4 இலட்சத்து 56 ஆயிரத்து 806 பேருக்கும், சிறுநீரக நோயாளர்கள் 19ஆயிரத்து 496 பேருக்கும் அங்கவீனமான வர்கள் 46 ஆயிரத்து 857 பேரும் உள்ளடங்களாக 5 இலட்சத்து 23 ஆயிரத்து 159 பேருக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதற்கான பெயர் விவரங்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

"அஸ்வெசும" சமூக நலன்புரி திட்டத்தில் பதிவு செய்துகொள்ள முடியாவிட்டாலும் இதில் இணைந்துகொள்ள விரும்புவோருக்கு வருடாந்தம் வாய்ப்பளிக்கப்படும் - என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, "அஸ்வெசும" சமூக பாதுகாப்பு நலன்புரி திட்டத்துக்காக நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு 37 இலட்சம் விண்ணப்பங்களில் 33 இலட்சம் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவர்களில் "அஸ்வெசும" பலன்களை பெற்றுக்கொள்ள தகுதியானவர்கள் என்ற வகையில் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்புகளை தெரிவிப்பதற்காக 20 இலட்சம் பேரின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் மூவர் அடங்கிய தெரிவுக்குழுக்களின் கீழ் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட பின்பே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

"அஸ்வெசும" நலன்புரித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நலன்கள் கிடைக்க வேண்டும் என்ற போதிலும், தற்போது வெளியான பெயர் பட்டியலில் பெயர்கள் இல்லாதவர்கள் தங்கள் மேன்முறை யீடுகளை ஜூலை 10 வரையில் சமர்பிக்கலாம்.

இதேபோல் சமூக நலன்புரித் திட்டங்களுக்கு தகுதியற்றவர்களின் விவரம் அடங்கிய பட்டியலில் பெயரிடப்பட்டிருப்போர் தமது எதிர்ப்புகளையும் முறையிடலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் மீட்பு!



முல்லைத்தீவு, ஜுன் 30

கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு கிடைக்கப்பெற்ற உடைகளை அடிப்படையாகக் கொண்டு இவை பெண் போராளிகளினுடையவையாக இருக்கலாம் என்று தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வளங்கல் வடிகாலமைப்பு சபை குடி தண்ணீர் விநியோகத் திட்டத்துக்காக நிலத்தை வெட்டியபோதே இந்த மனித எச்சங்கள் கண்டறியப்பட்டன.

இதையடுத்து, கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அங்கு விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# சிமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 30

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்புகளை திருடினர் என்ற குற்றச்சாட்டில் இருவரை நேற்று வியாழக்கிழமை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் சுமார் 2 ஆயிரத்து 500 கிலோ இரும்பை மீட்டுள்ளதாகவும் கைதானவர்களில் ஒருவர் சிமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள நல்லிணக்க புரம் பகுதியை சேர்ந்தவர் எனவும் மற்றையவர் மானிப்பாயை சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மாங்கொல்லை எனும் பிரதேசம் கடந்த 33 ஆண்டுகளாக இராணுவ கட்டுப்பாட்டினுள் இருந்த நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறி இருந்தனர்.

அந்தப் பகுதி இன்னமும் காணி உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாத நிலையில், அப்பகுதிகளுக்குள் ஊடுருவும் இரும்பு திருடும் நபர்கள் வீடுகளை உடைத்தும் காணிகளுக்குள் காணப்படும் இரும்புகளையும் திருடி செல்கின்றனர்.

இந்தத் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தொடர்ந்தும் இரும்புகள் களவாடப்பட்டு வருகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

## எதிர்க்கட்சிகள்...

ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மக்களை ஏறிமிதிக்கின்ற எந்தத் திட்டங்களையும் சட்டங்களையும் நாம் முன்னெடுக்க மாட்டோம். நாட்டின் நலன் கருதியும் நாட்டு மக்களின் எதிர்கால நலன் கருதியுமே திட்டங்களை நாம் முன்னெடுக்கின்றோம்.

எமது ஆட்சியில் எந்த சட்டமூலமும் மக்களுககு பாதகமாக அமையாது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஊடகங்கள் உண்மைக்கு புறம்பான தகவலை வெளியிடுகின்றன. இதேவேளை, எதிர்க்கட்சிகள் தங்கள் வாக்கு வங்கிக்காக மக்கள் மத்தியில் பொய் பிரசாரத்தை முன்னெடுக்கின்றன.

நாடு முன்னோக்கி செல்ல வேண்டுமெனில் எதிர்க்கட்சியினர் எம்முடன் கைகோர்க்க வேண்டும். இல்லையேல், தங்கள் பாதையில் செல்ல வேண்டும் என்று அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதை விடுத்து மக்களை படைக்காய்கள் ஆக்கக்கூடாது - என்று கூறினார். (ஐ)

## புத்தூர்...

தொடர்புடைய பலரை தேடி வருகின்றனர்.

கணினி வரைகலை மூலம் பெண்களை ஆபாசமாக சித்திரித்து சமூக வலைத்தளத்தில் படங்களை பதிவிட்டனர் என்று கூறி புத்தூரில் நேற்று முன்தினம் இரவு இரு வீடுகளுக்குள் புகுந்த 50இற்கும் மேற்பட்டவர்கள் இரு இளைஞர்களை கடுமையாக தாக்கினர்.

இந்த வன்முறையை பொலிஸார் வான்நோக்கி துப்பாக்கியால் சுட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதைத் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் அச்சுவேலி பொலிஸார் 31 பேரை நேற்று கைது செய்தனர். இவர்களில் 25 பெண்களும் அடங்குவர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களை தேடி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

## கல்லுண்டாய்...

பயணித்த அப்பாச்சி மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிய திசையில் பயணித்த பிளசர் வகை மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதின. இதில், பயணித்த சரோஜன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றவரான மதுரன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவர் யாழ். போதனா மருத்துவமனையின் தாதிய உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையால் மீண்டெழ முடியும்!

## உலக பொருளாதார பேரவை தலைவர் நம்பிக்கை

பீஜிங், ஜூன் 30

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழக்கூடிய இயலுமை இலங்கைக்கு உள்ளதாக உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

சீன வெளிவிவகார அமைச்சர் சின் காங்கின் உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் 7 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அங்கு பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இதன் ஓரங்கமாக சர்வதேச பொருளாதாரக் கட்டமைப்புக்களில் ஒன்றான உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டியை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் பொருளாதார மீட்சி செயன்முறை என்பன தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நெருக்கடியிலிருந்த மீண்டெழக்கூடிய இலங்கையின் இயலுமை தொடர்பாக உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டி இதன்போது நம்பிக்கை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேபோன்று பீஜிங்கில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள அமைச்சர் அலி சப்ரி, அவர்களை வர்த்தகத்துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும், இலங்கையின் நல்லெண்ணத் தூதுவர்களாக செயற்படுமாறும் ஊக்குவித்துள்ளார். (அ)



# நல்லூர் கந்தனை வழிபட்ட மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூன் 30

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிதறு தேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# 2 ஆணைக் குழுக்களுக்கு தலைவர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 30

தேர்தல்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் பெயரிடப்பட்டுள்ளனர்.

அதன்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி. தெஹிதெனியவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# "கடன் மறுசீரமைப்பினால் மக்களுக்கு பாதிப்பில்லை"



கொழும்பு, ஜூன் 30

கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதால், நாட்டுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்பதை ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு குறித்து, ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுப்படுத்தும் கலந்துரையாடல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியின் ஆளுநர், கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படப் போகிறது என்பதை விளக்கமளித்தார்.

வெளிநாட்டுக் கடன் தொகையாக 49 ஆயிரம் மில்லியன் டொலர் நிலுவையில் உள்ளது.

17 வீத சலுகையை நாம் கடன் வழங்குனர்களிடம் கோரியுள்ளோம்.

இதன்போதுதான், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளுமாறு எமக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

உள்நாட்டுக் கடனாக 7 ஆயிரம் மில்லியன் அளவில் காணப்படுகிறது. ஆனால், கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்பதை ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்-என்றார். (அ)

# யாழ். ஆயர், நாக விகாராதிபதியை சந்தித்து கலந்துரையாடிய மைத்திரி!





யாழ்ப்பாணம், ஜூன் 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ். ஆயர் மற்றும் நாக விகாரதிபதியை மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சுதந்திர கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஆரியகுளம் நாக விகாரைக்குச் சென்ற மைத்திரிபால வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் நாக விகாரதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள மைத்திரிபால சிறிசேனா, நேற்று வியாழக்கிழமை முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு பொது நிகழ்வுகளிலும், சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார். (அ)

# இலங்கைக்கான பிரிட்டன் தூதுவராக அன்றூ பற்றிக்

கொழும்பு, ஜூன் 30

இலங்கைக்கான பிரிட்டனின் புதிய தூதுவராக இராஜதந்திரியான அன்றூ பற்றிக் நியமிக்கப்பட் டுள்ளார்.

இதுவரை தூதுவராக பதவி வகித்த சாரா ஹூல்டன், தமது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையிலேயே பற்றிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அன்றூ பற்றிக் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# ராஜபக்ஷக்களின் பிச்சையே ரணிலின் ஜனாதிபதிப் பதவி!

## வஜிரவுக்கு நாமல் பதிலடி

கொழும்பு, ஜூன் 30

"ராஜபக்சக்கள் வழங்கிய கதிரையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருக்கின்றார். அவரின் கதிரையைச் சுற்றி மொட்டுக் கட்சியினர் பாதுகாப்பு வழங்குகின்றனர். இதை வஜிர அபேவர்த்தன மறுக்க மாட்டார் என நான் நினைக்கின்றேன்."

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ வருவதை மக்கள் விரும்பமாட்டார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைத்த நாமல் எம்.பி.,

"ராஜபக்ஷக்கள் எவரும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள் என்று என்ன துணிவுடன் வஜிர கூறினார் என்று எனக்குத் தெரியாது. மக்கள் ஆணை இன்னமும் ராஜபக்ஷக்களுக்கும் மொட்டுக் கட்சியினருக்கும் உண்டு. இதை வஜிர அபேவர்த்தன உள்ளிட்ட எவரும் நம்பவில்லையாயின் தேசிய ரீதியில் தேர்தல் ஒன்றை விரைந்து நடத்திக்காட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அந்தத் தேர்தலில் மக்கள் ஆணை எவருக்கு - எந்தக் கட்சிக்கு உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும்."-என்றார். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.